www.tamilarangam.net

களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 30-09-1994

அன்பளிப்பு 40P

## சிறீலங்காவின் காலதாமதம்

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில், தமது தரப்பில் பங்கெடுத்துக்கொள்பவர்கள் பற்றி சிறீலங்கா அரசாங்கத்திற்கு உடனடியாக விபரங்களை அனுப்பிவைத்தபோதிலும், சிறீலங்கா அரசாங்கம் அதற்கு உடனடியாகப் பதில் ஏதும் அளிக்காது, காலத்தை வீணடித்து வருவது, சிறீலங்கா அரசிற்கு உண்மையாகவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை உண்டா? அல்லது வேறு உள்நோக்கங்களுக்காக கால அவகாசத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றதா? என்ற ஐயத்தை அரசியல் அவதானிகளிடையே ஏற்படுத்தியுள்ளது.

# போர் நிறுத்தமே சமாதான சூழலுக்கு வழி

**— தமிழீழத் தேசியத் தலைவர்**

"சாதாரண சிங்கள மக்கள் போரை விரும்பவில்லை. சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பது எமக்குத் தெரியும். இந்தத் தேர்தல் முடிவுகளும் இதையே நிரூபித்துக் காட்டுகின்றன. நாமும் சமாதானத்தையே விரும்புகின்றோம். நிரந்தரமான சமாதானம் ஏற்பட்டு, மக்கள் எல்லோரும் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதையே நாமும் விரும்புகின்றோம். இன்று சமாதானத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பது போர். எனவே போர் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படல் வேண்டும். போரைத் தமிழ் மக்கள் மேல் திணித்தவர்களே, போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்".

**இவ்வாறு, தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், அண்மையில் தமிழீழம் சென்ற இலண்டன் பி.பி.சி தமிழோசை செய்திச்சேவையைச் சேர்ந்த திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் அவர்களுக்கு 13.08.94 இல் அளித்த பேட்டியில் வலியுறுத்தியுள்ளார். தலைவர் பிரபாகரன் அவர்கள் அளித்த பேட்டியின் முழுவிபரமும் பின்வருமாறு:-**



**ஆனந்தி:**

பிரபாகரன் அவர்களே! புதிய பிரதமர் சந்திரிகா தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தனது முக்கியமான பணிகளில் ஒன்றாக இருக்குமென்றும் இது தொடர்பாக உங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடக்கப்போவதாகவும் கூறியிருக்கிறார். பேச்சுவார்த்தைகள் நடப்பதற்கான சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டுவருவதாக நீங்கள் கருதுகின்றீர்களா?

**தலைவர் பிரபாகரன்:**

நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு நாம் தயார். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒரு சுமூகமான சூழ்நிலையில், ஒரு சமாதானமான சூழ்நிலையில் நடைபெறுவதையே நாம் விரும்புகின்றோம். புதிய அரசாங்கம் பொருளாதாரத்தடையை தளர்த்தியிருக்கிறது. இது ஒரு ஆக்கபூர்வமான நல்லெண்ண நடவடிக்கை. இதனை நாம் வரவேற்கின்றோம். ஆயினும், பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்படவில்லை. சில அத்தியாவசியப் பொருட்களுக்கான தடை இன்னமும் இருக்கிறது. இது ஒருபுறமிருக்க, மக்களின் போக்குவரத்திற்கான பாதைகளையும் அரசாங்கம் மூடிவைத்திருக்கிறது. இதனால், பொருளாதாரநிலை சீராகப்போவதில்லை; மக்களின் துன்பச்சுமை குறையப்போவதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழர் தாயகத்தில், ஒரு சமாதான சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியம். போரை நிறுத்துவதற்கு தயார் என நாம் அறிவித்திருக்கிறோம். ஆனால், போர் நிறுத்தத்தைக் கொண்டுவருவதற்கு அரசு தயங்குவது போல் தெரிகிறது. அரசபடைகளின் தாக்குதல்கள் தொடரவே செய்கின்றன. குறிப்பாகக் கடற்படையினரின் தாக்குதல்கள் தொடர்கின்றன. இது சமாதான சூழலுக்குப் பங்கம் விளைவிப்பதாகவே அமையும். ஒட்டுமொத்தத்தில் பார்க்கும்பொழுது, தமிழ்ப் பகுதிகளில் இயல்புநிலை இன்னமும் திரும்பவில்லை. நல்லெண்ணநிலை தோன்றி வருகின்றது. ஆனால், சமாதான சூழ்நிலையும் சகஜநிலையும் இன்னும் ஏற்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். எனவே, ஒரு சுமூகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு அரசுதான் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

**ஆனந்தி:**

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்குத் தயார் என முன்பு கூறியிருக்கிறீர்கள். இப்பொழுது பொருளாதாரத் தடையை நீக்குங்கள், போர் நிறுத்தம் அறிவியுங்கள் என நிபந்தனை விதிக்கின்றீர்களே?

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

**"தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதன் மூலமே இன்றைய இனநெருக்கடிக்கு தீர்வு காணலாம்"**

உள்ளே...
உள்ளே...

நீங்காத நினைவலைகள் - ஆனையிறவுச் சமர் - நடுபக்கங்கள்

சிறீலங்கா இராணுவத்திற்கு மீளமுடியாத இழப்பு - அராலிக் கண்ணிவெடி - பக்கம் 7

தமிழீழ உட்கட்டுமானம் - நீர் வழங்கலும் வடிகாலும் - பக்கம் 12

தமிழீழ விளையாட்டரங்கு - பக்கம் 13

சிறுகதை :- நிமிர்வு - பக்கம் 11

மறைந்தும் மறையாத பொதுவுடமையாளர்களும், கலைந்தும் கலையாத சோவியத் சாம்ராச்சியமும் - பக்கம் 6

# தமிழ்மக்கள் உயிர் குடித்த 20 கோடி ரூபா பெறுமதியான கப்பல் மூழ்கடிப்பு

சிறீலங்கா கடற்படையின், 'சக்கரவர்த்தனா' என்ற 130 அடி நீளமும் 23 அடி அகலமும் 380 தொன் நிறையுமுள்ள கடற்படை ரோந்துக் கப்பல், அதில் இருந்த சுமார் 60 கடற்படையினருடன், மன்னார்த் தீவுக்கும் கற்பிட்டிக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில், கரையில் இருந்து 5 மைல் தூரத்தில் வைத்து கடற்புலிகளினால் தாக்கியழிக்கப்பட்டது. இக்கப்பல், வடபகுதிக் கடற்பரப்பில் மீனவர்கள் மீதும் குடியிருப்புக்கள் மீதும் சிறீலங்கா கடற்படை நடாத்தும் தாக்குதல்களை நெறிப்படுத்தி, வழிப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிகிறது.

இத்தாக்குதல் நடப்பதற்கு முன்னுள்ள நாட்களில் யாழ் திருவடிநிலைப்பகுதி, பண்ணைக் கடற்பரப்பு உட்பட பல இடங்களில் மீனவர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் சிறீலங்கா படைகள் நடாத்தி வந்த கண்மூடித்தனமான தாக்குதல்களால் உயிரிழப்புகளும், உடைமை அழிவுகளும் ஏற்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலின் போது நடைபெற்ற சண்டையை அடுத்து, விடுதலைப்புலிகள் 25 மில்லி மீற்றர் சீனரக இரட்டைப் பீரங்கி ஒன்றையும், 12. 5 மில்லி மீற்றர் இயந்திரத் துப்பாக்கிகளையும் மற்றும் கப்பலில் இருந்த நவீன ஆயுதங்களையும் அள்ளிக் கொண்டு சென்ற பின்னரே, கப்பலை அழித்ததாக சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதிகாலைவேளையில் இரண்டு படகுகளில் வந்த கடற்புலி வீரர்கள், முதலில் ஒரு படகை மோதி சண்டையை ஆரம்பித்தனர் எனவும், கப்பலின் ஒரு பகுதி சிதைந்த நிலையில், நடந்த சண்டைக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைப்பற்றிக் கொண்டு, பின்னர் மறு படகால் கப்பலை மீண்டும் மோதி அழித்ததாகச் சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# அவசரகால பிரகடனத்தில் வடக்கு, கிழக்கு என மாகாணங்கள் பிரிப்பு

சிறீலங்கா அரசாங்கம் வடக்கு -கிழக்கு மாகாணங்களிலும் அதன் எல்லைக் கிராமங்கள் சிலவற்றிலும் அவசரகால நிலைமையைத் தொடர்ந்தும் நீடிப்பதற்கான அரசாங்க வர்த்தமானி அறிவித்தலை 04. 09. 19-94 இல் வெளியிட்டது.

இதில் இலங்கையின் வடமாகாணம், கிழக்கு மாகாணம், புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி, வனாத்தவில்லு, கறுவலகஸ்வெவ பிரதேசச் செயலர் பிரிவுகள், அநுராதபுர மாவட்டத்தின் நொச்சியாகம, நுவரகம்பலதா (மத்திய), மதவாச்சி, கெபித்திகொல்லாவ, பதவியா, கொரவப்பத்தானை பிரதேசச் செயலர் பிரிவுகள் பொலனறுவை மாவட்டத்தில் திம்புலாகல லங்கா பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் அவசரகாலசட்டம், பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டத்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தம் தேவை என்போரில் எத்தனைபேரின் பிள்ளைகள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்

## லயனல் பெர்னாண்டோ சிங்களவரிடம் கேள்வி

"இன்று யுத்தம் தேவை என்று கூறியபடி, சிங்கள இனத்தைக் காப்பாற்றுவதற்கு முன்வரும் எத்தனைபேரின் பிள்ளைகள் யுத்தத்துக்கு நடைமுறையில் தொடர்பாக உள்ளனர், எனும் விடயத்தை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதிகமான உலக நாடுகளில் யுத்த முனைக்குச் செல்வது, ஆட்சியாளர்களின் பிள்ளைகள், சகோதரர்கள், மற்றும் உறவினர் ஆவர். ஆர்யன்ரீனா யுத்தத்திற்காக பிரித்தானியாவின் சார்பில் முடிக்குரிய இளவரசரின் சகோதரர் பங்குபற்றினார். இரண்டாவது உலக யுத்தத்தின்போது, அமெரிக்க ஜனாதிபதியின் சகோதரரும், ரஸ்யத் தலைவர் ஸ்டாலினின் புதல்வரும் யுத்த பூமியில் மரணத்தைத் தழுவினர் ஆனால், இலங்கையின் நிலைமை இதுவா? இறந்த சிங்களவர்களில் அதிகமானோர் சாதாரண சிங்கள மக்களிடையே இருந்து யுத்தமுனைக்குத் தள்ளப்பட்டவர்களே. இவர்கள் இறந்தது போர் அவசியம் என்பதினால் அல்ல; தொழிலின்மையும் யுத்தம் தொடர்பாக உருவாக்கப்பட்டிருந்த வீரத்துவம் தொடர்பான போலியான எண்ணமுமே இதற்குக் காரணம் ஆகும். உண்மையில் சிங்கள இனத்தையும், பௌத்த மதத்தையும் காப்பதற்காக முன்வந்து குரலெழுப்பும் தலைவர்களின் பிள்ளைகளில், எத்தனைபேர் யுத்தத்தினால் இறந்து உள்ளனர்; அல்லது சிறிலங்காப் பாதுகாப்புப் படையில் உள்ளனர்.

இங்கு யுத்தம் யாருக்குத் தேவையாக உள்ளது என்று கேள்வி நிச்சயமாக எழுப்பப்படவேண்டிய ஒன்றாகிறது.

சிறிலங்கா அரசின் புள்ளிவிபரங்களின்படி ஆண்டுக்கு 2, 500 கோடி ரூபா யுத்தத்துக்கு செலவிடப்படுகின்றது. இராணுவத்தின் ஆயுதங்கள், உபகரணங்கள், போக்குவரத்து, உணவுப் பொருட்கள் என்பவற்றுக்காகச் செலவிடப்படும் இத்தொகையை அனுபவிக்கும் இறக்குமதியாளர்களுக்கும், விநியோகத்தர்களுக்குமே யுத்தம் தேவை. இவர்கள் தான் இந்த யுத்தத்தினால், இலாபத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.

வயிற்றை வளர்த்துக்கொள்ளும் சந்தை வியாபார நிலைக்கும், அரசியல் இலாபங்களை ஏற்படுத்தவும், அகதிகளை விற்றுச் சாப்பிடும் மோசடியாகவும், நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகளை விநியோகிக்கும் தந்திரமாகவும் யுத்தம் உருவாவதை ஏற்றுக்கொள்ள முடியுமா?



லயனல் பெர்னாண்டோ

தமிழர்கள் தெற்கில் வாழும் மக்களைப்போன்று, மொழி, கலாச்சார, சமூக கண்ணோட்டங்கள் உள்ள மனிதர்களாக எழுந்துநிற்கும் சுதந்திரம் அவர்களுக்குக் கிடையாதா? ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான கொள்கை விளக்கத்திலும் இந்த அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன அல்லவா? தேசிய இறைமைபற்றிப் பேசும் தெற்கின் சிங்களத் தலைவர்களில், எத்தனைபேர் வடக்கில் வாழும் சாதாரண மக்களின் இந்த அடிப்படை உரிமைகள் பற்றிப் பேசியிருக்கின்றனர்?

யாழ். குடாநாட்டில் மட்டும் அகதிகளாயிருப்போரின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்திற்கும் அதிகம். அந்தப் பிரதேசத்தின் வீடு வாசல்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் ஆகியவற்றில் அதிகமானவை அழிந்துபோயுள்ளன.

அண்மையில் மக்கள் வழங்கிய தேர்தல் தீர்ப்பு, யுத்தத்தைத் தொடர்வதற்கானதா? அல்லது அமைதிக்கு கையசைப்பதற்கானதா என்பது தொடர்பாக முடிவெடுக்கவேண்டும். அதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மார்க்கத்தை அமைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ■

# 11 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பழமையான கணேசர் சிலை பொலநறுவையில் மீட்பு

இலங்கையின் முக்கோண கலாசாரப் பிரிவிற்குட்பட்ட பொலநறுவையில், கணேசர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச் சிலை பொலநறுவையிலுள்ள பழைமைமிகு கோவில் ஒன்றுக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ள சிலைகளையும் விட, இச்சிலை மிகவும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அந்நிய ஏகாதிபத்தியத்தின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது என்றும் நம்பப்படுகிறது.

11 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்திற்குரியது எனக் கருதப்படும் இச்சிலை, 65 சென்ரிமீற்றர் உயரம் கொண்டதாகவுள்ளது. பொலநறுவையில் இது வரை கண்டெடுக்கப்பட்டுள்ள சிலைகளைவிட, சிறந்த உருவமைப்பை இச்சிலை கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ■

# கப்டன் அங்கயற்கண்ணி நினைவாக வீரவணக்கக் கூட்டங்கள்

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் சென்று, சிறிலங்காவின் மிதக்கும் கோட்டையாம் கட்டளையிடும் தாய்க்கப்பலையும்RR அதற்குத் துணைநின்ற டோறா விசைப்படகினையும் தகர்த்தழித்தபோது, வீரச்சாவடைந்த முதற்பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி நினைவு வெற்றி வீரவணக்கக் கூட்ட நிகழ்வுகள் அண்மையில், நான்கு இடங்களில் நடைபெற்றன. வடமராட்சி கிழக்கில் நாகர் கோவில் முன்றலிலும், வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், தென்மராட்சியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், வலிகாமத்தில் மானிப்பாய் மாவீரர் கலையரங்கிலும் இடம்பெற்றன. ■

# பொலிஸ் அதிகாரிகள் மீது விசாரணை செய்யக் குழு

பொதுத்தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும் அதிகாரிகளின் அதிகார துஸ்பிரயோகம் பற்றி முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த சிரேஸ்ட அதிகாரிகள் குழு ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி அனுமதி அளித்துள்ளார்.

குற்றவாளிகளாகக் காணப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரினால் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். ■

# கடந்தகால இராணுவ நடவடிக்கை பலாபலன்களை ஆராய்ந்த பின்பே அரசியல் தீர்வுக்கு தயாரானோம்

## பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் ஏற்பட்ட இராணுவ ரீதியான பின்னடைவுகளையும், அதே காலத்தில் இராணுவத் தரப்பின் முன்னேற்றங்களையும் ஒப்பு நோக்கியே வடக்கு -கிழக்கு யுத்தத்திற்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியற் தீர்வு காணும் முயற்சிகளில் புதிய அரசு இறங்கியுள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற சிரேஸ்ட அதிகாரிகளுடனான சந்திப்பொன்றிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அரசியற் தீர்வுக்கான அரசின் முயற்சிகளுக்கு முப்படைத் தளபதிகளினதும், பொலிஸ் மா அதிபரினதும் ஒத்துழைப்பு வேண்டுமெனவும் பரிபூரணமான ஒத்துழைப்பை அவர்கள் வழங்குவார்கள் என்பதில் நம்பிக்கையுண்டு எனவும் அப்போது அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மத வைபவங்களில் கலந்து கொள்ளும் சராசரி அரசியல்வாதியாக இப் பதவிக்கு நான் வரவில்லை, பாதுகாப்புப் படைகளில் உள்ள துன்பங்கள் துயரங்களின் அனுபவம் எனக்குண்டு. இந்த வைபவத்தில் கலந்து கொள்ளும் முப்படைகளினதும், பொலிஸ் படையினதும் சிரேஸ்ட அதிகாரிகளை ஏற்கனவே அறிந்துள்ளவன், எனவே, அமைச்சின் பிரச்சினைகளை நான் அணுகுவதால் பிரச்சினைகள் தோன்றாது என அவர் தெரிவித்தார்.

இறந்த படையினரையும், குடும்பத்தினரையும் நாம் என்றும் நினைவில் கொள்ள வேண்டும். வடக்கு -கிழக்கு யுத்தத்தினால் இலங்கையின் பொருளாதாரம் சீரழிந்துவிட்டது. இதனால் நாடு கண்டுவரும் தாழ்வு நிலையையும் தடுக்க திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் மேலும் முனைப்பாக இருப்பதாகவும் தெரிவித்த அவர், ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசியல் தீர்வை, நடைமுறைப்படுத்த முயலப் போவதாகவும் கூறினார். ■

# இந்தியாவின் பார்வை தொடருகின்றது

இலங்கையின் இனப்பிரச்சினையில் மீண்டும் இந்தியாவின் தலையீடா? என்ற கேள்வி முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது. சிறிலங்காவின் அரசியலில் ஏற்பட்ட புதிய மாற்றத்தினால், இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு மீண்டும் உசாரப்பட்த் தொடங்கியுள்ளது.

சிறிலங்காவின் புதிய பிரதமர் திருமதி. சந்திரிகா, "வடக்கு - கிழக்கில் இருப்பது இனப்பிரச்சினையே; அதற்கு சமாதான பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வைக் காண, புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தத் தயாராக இருக்கின்றேன்" என தெரிவித்துள்ளார். புதிய அரசுடன், நிபந்தனையற்ற சமாதான பேச்சுக்களில் ஈடுபட தயாராக உள்ளோம் என தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களும் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இவ் அறிவிப்புக்கள் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவை மீண்டும் உசாரப்படுத்தி உள்ளதாகத் தெரிகின்றது. இலங்கையின் இவ் விவகாரத்தைக் கவனிக்க, தனிப்பட்ட பிரிவு ஒன்றையும் இந்திய அரசு ஏற்படுத்தியுள்ளதாக அறியப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு, சிறிலங்கா அரசுப் பிரதிநிதியாக யாழ் அனுப்படுவார் என எதிர்பார்த்திருந்த லயனல் பெர்னாண்டோ திடீரென இந்தியா சென்றுள்ளார். இவரது இந்திய விஜயம் தனிப்பட்ட விவகாரமே என அரச மட்டத்தில் கூறப்பட்டாலும், அது இனப்பிரச்சினையோடு தொடர்பானது என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

மேலும், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தை நிசமாகும் போது, அது தொடர்பாக இந்தியாவுக்கும் தெரியப்படுத்த வேண்டுமென, இந்தியாவில் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றிய டாக்டர் நெவில் கனகரட்ண தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

# விடுதலைப்புலிகளின், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதல் புறம் தள்ளக் கூடியது அல்ல

## - இராணுவ ஆய்வாளர் கருத்து

"விடுதலைப் புலிகளின், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அண்மைக் காலத் தாக்குதல் நடவடிக்கைகளை, பத்தோடு பதினொன்று என்று புறம் தள்ளி விட முடியாது" என பலாலி விமானப் படைத்தளத்தின் உள்ளே மேற்கொண்ட புலிகளின் ஊடுருவலும் தாக்குதலும் பற்றி, இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பலாலியில் கரும்புலிகள் ஊருடுவி நடாத்திய தாக்குதலில் அழிக்கப்பட்ட பெல் 212 ரக உலங்குவானூர்தியின் பெறுமதி 40 கோடி ரூபா என சண்டேலீடர் பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளரின் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அரசியல் தலைவர்கள் தம்மை மறந்து ஈடுபட்டிருந்த போது, இந்நாட்டில் பெரும் போர் ஒன்றும் நடந்து கொண்டிருக்கின்றது என்ற யதார்த்த நிலையை சகலரும் உணர்ந்து கொள்ளக் கூடிய வகையில் பலாலி முகாம் மீதான தாக்குதல் அமைந்தது என அரசியல்அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பலாலி தாக்குதலின்பின், ஒரு மாதத்திற்குள் கடற் கரும் புலிகளின் இரு தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. 16. 08. 94 இல் காங்கேசன்துறை துறைமுகத்தை அண்டிய கடற்பரப்பில் நடாத்தப்பட்ட கடற் கரும்புலித் தாக்குதலில் கட்டளையிடும் தாய்க்கப்பல் ஒன்றும் அதற்குத் துணை நின்ற "டோறா" பீரங்கிப் படகொன்றும் தாக்கி அழிக்கப்பட்டன. 19. 09. 94 இல் மன்னார் கடலில் வைத்து கடற்படை ரோந்துக் கப்பலொன்று கடற் கரும்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டதாக சிறிலங்காவின் கடற்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. இத்தாக்குதல்கள், யத்த நிறுத்தத்தின் அவசியத்தை உணர்த்தி நிற்பதாக அரசியல் அவதானிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். ■

# விகிதாசார தேர்தல் முறையை மு.காங்கிரஸ் எதிர்க்கும்

- எம்.எச்.எம்.அஷ்ரப்

விகிதாசார தேர்தல் முறையிலுள்ள பாதகங்களை நீக்குவதற்கான போராட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீவிரமாக ஈடுபடும் என அதன் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஸ்ரப் கூறியுள்ளார்.

தற்போதைய தேர்தல் முறையினால் பல ஆசனங்களை நாம் இழக்க நேரிட்டது. இந்தப் பாதகமான நிலையை நீக்க நாம் முயற்சிகளை மேற்கொள்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ■

www.tamilarangam.net



# முட்டுக்கட்டை நீங்குமா?

"இன்று சமாதானத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பது போர். எனவே போர் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும். யார் இந்தப் போரைத் தமிழ் மக்கள் மீது திணித்தார்களோ, அவர்களே போருக்கு முடிவுகட்ட வேண்டும்" என்று, இலங்கைத்தீவின் இன்றைய அரசியல் யதார்த்தத்தை மிகத்தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார், தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்.

அத்துடன், உண்மையான அமைதியின்பால் புதிய அரசாங்கத்திற்கு அக்கறை இருக்குமானால், 'யுத்த நிறுத்தப் பிரகடனம்' ஒன்றே, அது தொடர்வதற்கான வழி என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

குண்டுவீச்சுக்களும், எறிகணைத் தாக்குதல்களும் தமிழீழ மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் அழித்துக்கொண்டிருக்கும் நேரத்தில், அந்த மக்களுக்குத் 'தேசிய பாதுகாப்பை' (National Security) வழங்கிவரும் விடுதலைப் புலிகள் அதனைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இதனையே, கற்பிட்டிக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட 'சக்கரவர்த்தனா' ரோந்துக் கப்பல் மீதான கடற்புலிகளின் தாக்குதலும், மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ அணி மீதான தாக்குதலும் வலியுறுத்துகின்றன. அதனால்தான் இதனை சிறீலங்காவின் தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா, "சமாதான முயற்சியை வேகப்படுத்தும் நடவடிக்கை" என வர்ணித்துள்ளார்.

தமிழீழ மக்கள் 'ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு மக்கள், அனைவரும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதையே விரும்புகின்றனர்'. ஆனால், அதேவேளை சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், "இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் போர் பல வருடங்களாக பலத்த உயிரிழப்பு, உடைமையிழப்புக்கு மத்தியில் நடந்துகொண்டிருக்கின்றது; இந்தப் போரை ஒரு முடிவுக்குக்கொண்டுவந்து, பேச்சுவார்த்தைகள் மூலம், சமாதானத்தை நிலைநாட்டுவதே எங்கள் நோக்கமாகும். எமக்கு சமாதானம் வேண்டும்; ஆனால், எந்த விலை கொடுத்தும் நாங்கள் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளத் தயாராயில்லை என்று கூறுவாரேயானால், அதே பதிலைத் திருப்பிக் கூறும் வலிமையை தமிழீழ மக்களும் இன்று பெற்றுள்ளார்கள்.

தமிழீழம் எனப்படுவது உருவாக்கப்படும் ஒரு தேர்தல் தொகுதியல்ல; வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல், தொடர்ந்து வரும் வரலாற்று உண்மை. வடக்கு -கிழக்கு மாகாணங்கள் அடங்கிய பிரதேசமானது, தமிழ்பேசும் மக்களது தாயகம்".

"எங்களை எங்கள் மண்ணில் சுதந்திரமாக வாழவிடுங்கள்" எனும் தமிழீழ மக்களின் கோரிக்கை பிரிவினைவாதமல்ல. இதையே, "எமது மக்கள் சமாதானமாக, கௌரவமாக உரிமைகள் பெற்று வாழவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்திருக்கின்றோம்; சிங்கள அரசுகள் எமது மக்களின் நியாயமான அடிப்படையான உரிமைகளை ஏற்று, நீதி வழங்க மறுத்தபடியால்தான் (கடந்த காலத்தில்) பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை" எனும் தேசியத் தலைவரின் கூற்று விளக்குகின்றது. இதை சிறீலங்காவின் புதிய அரசாங்கம் புரிந்துகொள்ளுமானால், யுத்தநிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டு, சமாதானத்திற்கான சமிஞ்ஞை வலுப்பெறுவதற்குக் காலதாமதம் ஆகாது. ■

# போரைத் தொடர்ந்தால் நாட்டு மக்களுக்கு பாரிய துரோகம் செய்தோமென வரலாறு கூறும்

**- விடுதலையான சிறீலங்கா பொலிஸ் லிண்டன் தர்மபால**

போரை மீண்டும் ஆரம்பித்து தீவிரப்படுத்தினாலும்கூட, அரசாங்கத்தால் வெற்றிபெற முடியாது. இதனால், அப்பாவிப் பொதுமக்களே உயிரிழப்பார்கள். இந்த அர்த்தமற்ற போரை இருதரப்பினருமே முடிவுக்குக் கொண்டுவந்து, சமாதான மார்க்கம் மூலம் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதே புத்திசாலித்தனமான நடவடிக்கையாகும். இந்தப் போரை நாம் முன்னெடுத்துச்செல்ல விரும்பினால், நாம் நமது நாட்டு மக்களுக்குச் செய்யும் பாரிய துரோகம் என, சரித்திரத்தில் அது இடம் பிடித்துக்கொள்ளும் என்பது நிச்சயமான உண்மை". என விடுதலைப் புலிகளிடம் 50 மாதகாலம் யுத்தக் கைதியாக இருந்து விடுதலையான, சிறீலங்கா பொலிஸ் லிண்டன் தர்மபால கொழும்பில் வைத்துக் கூறியுள்ளார்.

"நாம் விடுதலைப் புலிகளால் அரசியல் கைதிகளாக நடாத்தப்பட்டோம்; கௌரவமான முறையில் பராமரிக்கப்பட்டோம்; எம்மை ஒரு மேல்மாடியில் தான் தடுத்து வைத்திருந்தனர். கீழ் பகுதியில் அவர்களது காவலரண் இருந்தது. உணவு ஒழுங்காகப் பரிமாறப்பட்டது. சுகவீனமுற்றால், யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டோம். புலிகள் எம்மை சித்திரவதை செய்யவில்லை.

இந்த அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்தி, நம் சகோதரர்கள் உயிரிழப்பதை நாம் இனிமேலாவது தவிர்த்துக் கொள்ளவேண்டும்" என்றார். ■



விடுதலைப் புலிகளின் தடுப்புக்காவலில் இருந்து விடுதலையான 10 சிறீலங்காப் பொலிசாரும் இரத்மலானை விமானநிலையத்தில் வந்திறங்கியபோது...

# 175 ஆவது ஆண்டு நிறைவு விழா யாழ். மத்திய கல்லூரிக்கு தலைவரின் வாழ்த்து

அண்மையில் 175 ஆவது ஆண்டு நிறைவு நாளைக் கொண்டாடிய யாழ். மத்திய கல்லூரிக்கு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் வாழ்த்து செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அச்செய்தியில், "நீண்டதொரு வரலாற்றையும் நிலையான கல்விப்பாரம்பரியத்தையும் கொண்ட யாழ். மத்திய கல்லூரி தனது 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழீழக் கல்வித் துறையின் அந்தக் காலத்திலிருந்தே தமிழ் மண்ணில் அறிவு விளக்கு ஏற்றிவைத்து தமிழரின் தேசிய விழிப்பிற்கு வெளிச்சம் காட்டி வரும் பழம்பெரும் கல்விக் கூடங்களிலில் ஒன்றாக யாழ். - மத்திய கல்லூரி முக்கிய இடத்தை வகிக்கின்றது. கிட்டத்தட்ட இரண்டு நுற்றாண்டு காலம் வரை கல்விப் பணிபுரிந்து எமது சமூகத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இந்தக் கல்லூரிஆற்றிய அருந்தொண்டு பாராட்டுதற்குரியது.

தூண்களாக நிற்பவை கல்லூரிகளே. இந்தக் கல்லூரிகளின் ஆதார பலத்தில் தான் எமது இளம் சமூகத்தின் கல்வி வாழ்வு தங்கி நிற்கிறது. கல்லூரிகள் வளர்ச்சி பெற்று திறம்படச் செயலாற்றினால் கல்வித்துறை மேம்பாடு காணும் என்பது திண்ணம்.

யாழ். மத்திய கல்லூரி தனது கல்விப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு, தமிழீழ தேசத்தின் உயர்ச்சிக்கு உழைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# வடக்கே கடற்படையினரின் தாக்குதல் அதிகரிப்பு

## மீனவர் சிலரும் கைது

வடபகுதி கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையினரின் தாக்குதல்கள் அண்மையில் அதிகரித்துள்ளன. கடற்படையினரால், மீனவர் அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப்பட்டு கொல்லப்படுவதோடு, கைது செய்யப்படும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. சிலர் காணாமல் போயும் உள்ளனர்.

வடமராட்சிக் கிழக்குக் கடற்பரப்பில், தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் மீது கடற்படையினர் தாக்கியதில், மீனவர் ஒருவர் காணாமல் போய் உள்ளார். காணாமல் போன நாகர் கோவிலைச் சேர்ந்த சேதுலிங்கம் ராமு (வயது 20) என்பவர் கடற்படையினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. இவருடன் தொழிலில் ஈடுபட்டிருந்த ஏனைய மீனவர்கள் தாக்குதலில் இருந்து தப்பி நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

திருவடிநிலை கடற்பகுதியிலும், மீன் பிடித்துக் கொண்டிருந்த 5 மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தில் காணாமல் போன மீனவர்களில் இருவர் ஒரு வாரத்தின் பின் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர். கடற்படையினரின் எறிகணைத் தாக்குதலினால் தமது மீன்பிடிப்படகு உடைந்து விடவே தாம் நீந்திக் கரை சேர்ந்து விட்டதாகவும், ஏனைய மூவரையும் கடற்படையினர் கைது செய்து அழைத்துச் சென்று விட்டதாகவும் தப்பி வந்த இருவரும் கூறியுள்ளனர்.

மேலும், மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட எறிகணையால் பண்ணைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் பலத்த காயங்களுக்குட்பட்ட நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை கடற்கரைப் பிரதேசங்களை அண்டிய குடியிருப்புக்கள் மீதும், கடற்படையினரின் எறிகணைத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதனாலும் மக்களின் உயிர், உடைமைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. ■

நாம் வன்முறை மீது மோகம்கொண்ட போர் வெறியர்கள் அல்லர். நாம் உண்மையில் ஆன்மரீதியாக சமாதானத்தையே விரும்புகின்றோம். ஒரு நிரந்தரமான நிம்மதியான கௌரவமான சமாதானத்தையே விரும்புகின்றோம். அதனால்தான் இந்தக் கொடூரமான போரின் மத்தியிலும் சமாதானத்தின் கதவுகளை நாம் திறந்து வைத்திருக்கின்றோம். சமாதானத்தின் பாதையை நாம் மூடிவிடவில்லை. அப்படி மூடிவிடும் நோக்கமும் எமக்கில்லை. ஏனென்றால் சமாதானத்தை அடைவதற்காகவே நாம் போராடுகிறோம். என்றோ ஒரு நாள் எமது எதிரியானவன் எமது சமாதானக் கதவுகளைத் தட்டுவானாக இருந்தால் நாம் எமது நேசக்கரங்களை நீட்டத் தயாராக இருக்கிறோம்.

**தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் நிறுத்தமே சமாதான சூழலுக்கு ...

**தலைவர் பிரபாகரன்:**

பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனை எதையும் விதிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கு சமாதான சூழ்நிலை அவசியம் என்பதையே நாம் சுட்டிக் காட்டுகின்றோம். யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யாத சூழ்நிலையில், போர் நடவடிக்கைகள் தொடரலாம் அல்லவா. சண்டையை ஒருபுறம் நிகழ்த்திக் கொண்டு, சமாதானம் பற்றிப் பேசுவதில் அர்த்தம் உண்டா? இதனாலேயே, நாம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு போர் நிறுத்தம் அவசியம் எனக்கூறுகின்றோம். ஏனென்றால், பொருளாதார அமுத்தமும், போர் நெருக்கடியும் இருக்கும்வரை, சுதந்திரமான முறையில் பரஸ்பர நல்லெண்ணத்துடன், பேச்சுக்களை நடத்துவது சிரமமாகவிருக்கும். இதனைப் புதிய அரசு கருத்திற்கொள்ளவேண்டும். போர் நிறுத்தம் செய்வதற்கு அரசு இணங்குமானால், அதனை நல்லெண்ணத்தின் அறிகுறியாக, சமாதானத்தின் சமிஞ்சையாக நாம் கருதுவோம்.

**ஆனந்தி:**

அரசு ஓர் நல்லெண்ண சமிஞ்சையாக போர் நிறுத்தத்தைக் கொண்டுவரவேண்டும் எனக் கூறுகிறீர்கள். ஆனால், போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட்டால், புலிப்படையினர் தங்களைப் பலப்படுத்துவதற்காக இந்தப் போர்நிறுத்தத்தை பயன்படுத்துவார்கள் என்ற கருத்து இராணுவ வட்டாரங்களில் நிலவுகிறது. இதற்கு உங்கள் பதில் என்ன?

**தலைவர் பிரபாகரன்:**

இராணுவ வட்டாரங்களில் நிலவும் இந்தக் கருத்து முற்றிலும் தவறானது என்று நான் சொல்வேன். இராணுவ ரீதியில் போர் நிறுத்தம் எமக்குச் சாதகமானது அல்ல. எதிரியின் ஆயுதங்களைப் பறிப்பதிலும் அழிப்பதிலும்தான், எமது வளர்ச்சியும் பலமும் தங்கியுள்ளது. போர் நடவடிக்கைகள் மூலமே இது சாத்தியமாகின்றது. எனவே, போர் நிறுத்தம் எம்மைப் பலப்படுத்தும் எனக்கருதுவது தவறு. அப்படியிருந்தும் நாம் போர் நிறுத்தத்தை விரும்புவது, ஒரு உண்மையான சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கன்றி, வேறொன்றுக்கும் அல்ல. அடுத்ததாக, போர் நிறுத்தம் செய்யப்படாத சூழ்நிலையில், திடீரென எதிர்பாராதவகையில் மோதல்கள் நிகழலாம். உயிர்ச்சேதங்கள் ஏற்படலாம். அது சமாதான சூழ்நிலையையும் பேச்சுக்களையும் பாதிக்கும் அல்லவா?

**ஆனந்தி:**

தமிழர்களுக்கென்று ஒரு தாயகப்பகுதி வேண்டுமென நீங்கள் வலியுறுத்தி வருகிறீர்கள். ஆனால், சந்திரிகா அவர்களோ இந்தத் தமிழர் தாயகம் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும், வடக்கும் -கிழக்கும் இணைந்தது என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். ஆனால், மாற்றியமைக்கப்பட்ட எல்லைகளுடனான வடக்கும் -கிழக்கும் என்ற திட்டத்தை முன் வைக்கப்போவதாகக் கூறியிருக்கிறார். இது பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?

**தலைவர் பிரபாகரன்:**

தமிழர்களுக்கு ஒரு தாயகம் வேண்டுமென்பதை நான் மட்டுமல்ல, தமிழினம் முழுவதுமே காலம் காலமாக வலியுறுத்தி வருகின்றது. இது ஒரு வரலாற்று உண்மை. வட -கிழக்கு மாகாணங்கள் அடங்கிய பிரதேசமானது தமிழ் மக்களது, அதாவது தமிழ், முஸ்லீம் மக்களது தாயகம். இது எங்கள் நிலைப்பாடு. பிரதமர் சந்திரிகா அவர்கள் எவ்வித நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறாரென எமக்குத் தெரியாது. அவர் எவ்விதமான புதிய திட்டத்தை வகுத்திருக்கிறார் என்றும் எமக்குத் தெரியாது. எனவே அத்திட்டத்தை பரிசீலிப்பதற்கு முன், எமது கருத்தைத் தெரிவிப்பது விவேகமானதல்ல. பேச்சுவார்த்தையின்போது, இவ்விவகாரத்தில் அரசின் நிலைப்பாடு என்ன என்பது தெரியவரும். அப்போது எமது கருத்தையும் கூறலாம்.

**ஆனந்தி:**

உங்களுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடக்கும் பட்சத்தில், ஏனைய தமிழ்க் குழுக்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள இணங்குவீர்களா?

**தலைவர் பிரபாகரன்:**

இந்தத் தமிழ்க் குழுக்கள் தனித்தும், கூட்டாகவும் அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன. அதுபற்றி எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், தமிழ் மக்களது உண்மையான பிரதிநிதிகள் யார்? தமிழ் மக்களது உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராடுபவர்கள் யார்? என்பதை இந்தப் புதிய அரசாங்கம் உணர்ந்திருக்குமென்றே நான் நம்புகின்றேன். எனவே, தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகளாகிய எம்முடன் அரசு நேரடியாகப் பேசுவதையே நாம் விரும்புகின்றோம். அந்தப் பேச்சுக்கள்தான் பயனுள்ளதாக, அர்த்தமுள்ளதாக அமையும்.

**ஆனந்தி:**

உங்களுக்கும் பிரேமதாச அரசுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளை நீங்கள் பாதியில் முறித்துவிட்டீர்கள். எனவே அரசு உங்களை நம்பி மீண்டும் ஏன் பேச்சுவார்த்தையில் இறங்க வேண்டும்?

**தலைவர் பிரபாகரன்:**

பிரேமதாச அரசுடன் நடந்த பேச்சுவார்த்தைகளை நாங்கள் முறித்துவிட்டோம் எனக் கூறுவது தவறு. நாங்கள் பேச்சுக்களை இடையே முறிக்கவில்லை. கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது. ஆனால் இந்த இரண்டாண்டு கால பேச்சுக்களின் போது தமிழ் மக்களது அடிப்படையான பிரச்சினைகள் எதுவுமே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. பிரேமதாச அரசு தமிழர்களது தேசியப் பிரச்சினை தொடர்பாக எவ்விதமான தீர்வுத்திட்டத்தையும் முன் வைக்கவில்லை. இதனால் பேச்சுக்கள் அர்த்தமில்லாமல் இழுபட்டு, இறுதியில் செயலிழந்து போயின. இது தான் உண்மையில் நடந்தது. நாங்கள் தான் நம்பிக்கைத் துரோகம் இழைத்துவிட்டோமெனக் கூறுவது எல்லாம் வெறும் விசமப் பிரச்சாரமே. எல்லாப் பேச்சுவார்த்தைகளின் போதும் நாம் எமது மக்களின் நலன்களையே முதன்மைப்படுத்தி வந்துள்ளோம். எமது மக்கள் சமாதானமாக, கௌரவமாக, உரிமைகள் பெற்று வாழவேண்டும் என்பதையே நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். சிங்கள அரசுகள் எமது மக்களது உண்மையான, நியாயமான அடிப்படையான உரிமைகளை ஏற்று நீதி வழங்க மறுத்ததால்தான் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை. காலம் காலமாக தமிழர்கள் தான் சிங்களவர்களால் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். ஒப்பந்தங்களை முறித்து, உடன்பாடுகளை உடைத்து சிங்கள அரசுகள்தான் தமிழர்களுக்கு நம்பிகைத் துரோகம் இழைத்து வந்திருக்கிறது. இந்த வரலாற்று உண்மையை எவரும் மறுக்க முடியாது. தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, அவர்களுக்கு நீதி வழங்க புதிய அரசு உறுதி பூண்டிருந்தால், விடுதலைப் புலிகள் ஏமாற்றிவிடுவார்கள் என அச்சங்கொள்ளத் தேவையில்லை.

**ஆனந்தி:**

யாழ்ப்பாணத்திற்கும் பெருநிலப்பகுதிக்கும் இடையேயான போக்குவரத்துப் பாதைகள் திறக்கப்படுவதற்கு, புலிப்படையினர் தடையாக இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதற்கு உங்கள் பதில் என்ன?

**தலைவர் பிரபாகரன்:**

இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மை எதுவும் இல்லை. யாழ்குடாநாட்டிற்கும், வடமாநிலத்திற்குமிடையே ஆனையிறவு, பூநகரி என்ற இரண்டு தரைப்பாதைகள் உள்ளன. இந்த இரண்டு பாதைகளையும் சிங்கள இராணுவம் மூடி வைத்திருக்கிறது. யாழ்ப்பாணத்தை முற்றுகையிடுவதை நோக்கமாகக் கொண்டு இந்தப் பாதையை இராணுவம் தடுத்து வைத்துள்ளது. மக்கள் போக்குவரத்தை இராணுவம் தடுத்து வைத்துள்ளது. அதனால்தான் மக்கள் கிளாலி கடல்வழிப் பாதையால் பிரயாணம் செய்து வருகிறார்கள். இந்தக் கடற் பயணத்தை தடுப்பதற்காக சிங்கள ஆயுதப்படைகள் நடத்திய படுகொலைகள் ஏராளம். கிளாலி கடல்வழிப் பாதை வழியாக எமது மக்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதற்காக எமது கடற்புலிகள் அளப்பரிய தியாகங்களைச் செய்து இருக்கிறார்கள். எத்தனையோ வீரச்சாதனைகளை படைத்திருக்கிறார்கள். இன்று கிளாலி கடற்பரப்பு எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது. எமது போராளிகளின் பாதுகாப்புடன் மக்கள் இந்தப் பாதை வழியாக பயமின்றி பயணம் செய்து வருகிறார்கள். ஆனால் தரைப்பாதை ஒன்றைத் திறந்து எமது மக்களதும், வாகனங்களினதும் போக்குவரத்தை இலகுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் நாம் அதை வரவேற்போம். இராணுவ சோதனைகள், கெடுபிடிகள் எதுவுமின்றி மக்கள் சுதந்திரமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். இந்த வகையில் பூநகரியில் தரித்து நிற்கும் இராணுவத்தை வாபஸ் பெற்று, சங்குப்பிட்டிப் பாதையை அரசாங்கம் திறந்து விடுமானால், எமது மக்கள் அதனை பெரிதும் வரவேற்பார்கள் என்பது திண்ணம்.

**ஆனந்தி:**

அண்மையில் நடந்த பாராளுமன்றத்திற்கான தேர்தலில் நீங்கள் கலந்து கொண்டு இருக்கலாமே. ஏன் போட்டியிடவில்லை?

**தலைவர் பிரபாகரன்:**

தமிழரின் தேசிய பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிட்ட வேண்டும். அதன் பின்னரே நாம் தேர்தலில் பங்கு கொள்வது பற்றி சிந்திக்கலாம். நீண்ட காலமாகவே பாராளுமன்ற அரசியலில் தமிழர்கள் பங்குபற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் பாராளுமன்ற அரசியல் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணத் தவறிவிட்டது. அது மட்டுமல்லாமல் பாராளுமன்றத்தின் மூலமாகவே தமிழர்களுக்கு விரோதமான பல ஒடுக்குமுறைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. காலம் காலமாக சிறீலங்காப் பாராளுமன்றம் பெரும்பான்மைச் சிங்கள மக்களது நலன்களையும், அபிலாசைகளையுமே நிறைவு செய்து வந்திருக்கிறது. தமிழரின் நலன்களை நசுக்கி வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழர்கள் மீண்டும் பாராளுமன்றம் செல்வதில் எவ்விதப் பயனும் ஏற்படப் போவதாக நாம் கருதவில்லை. அதுவும் நியாயமற்ற முறையில் சட்ட விரோதமாக நடந்த தேர்தலில் நாம் பங்கு கொள்ள விரும்பவில்லை.

**ஆனந்தி:**

நான் அண்மையில் புத்தளத்திலுள்ள முஸ்லீம் அகதி முகாம்களுக்கு சென்று இருந்தேன். யாழ்ப்பாணத்திலிருந்து உங்களால் வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் அனைவரும் தாம் யாழ்பாணத்து மக்களுடன் நேசமாகவும், பாசமாகவும் வாழ்ந்ததாகக் கூறி வேதனைப்பட்டார்கள். தங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமென்ற உறுதி வழங்கப்பட்டால் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வரவே விரும்புவதாகக் கூறினார்கள். சுமூகமான நிலை உருவானால், இந்த மக்களை, தமது சொந்த ஊருக்கு திரும்புவதற்கு அனுமதிப்பீர்களா?

**தலைவர் பிரபாகரன்:**

யாழ்ப்பாணம் இந்த மக்களின் சொந்த மண். துரதிஸ்டவசமாக, சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இந்த மக்கள் அகதிகளாக நேரிட்டது. இதையிட்டு நாம் வருந்துகின்றோம். சுமூகமான நிலையேற்பட்டால் இந்த மக்கள் யாழ்ப்பாணம் வருவதை அனுமதிப்போம். போர் சூழ்நிலைகள் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் மூன்று இலட்சம் தமிழ்மக்கள் அகதிகளாக வாழ்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் குறிப்பாக தீவுப்பகுதி, மற்றும் வலிகாமம் வடக்கில் இராணுவம் குடியிருப்பு நிலங்களை ஆக்கிரமித்துள்ளதால் இந்த மக்கள் குடிபெயர்ந்து அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். இந்தத் தமிழ் அகதிகளில் ஒரு கணிசமான தொகையினர் முன்பு முஸ்லீம் மக்கள் வாழ்ந்த இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளார்கள். சிங்கள இராணுவம் தான் ஆக்கிரமித்துள்ள குடியிருப்புகளிருந்து வெளியேறுமெனில், தமிழ் அகதிகள் தங்கள் கிராமங்களுக்கு திரும்பிச் செல்ல வசதியேற்படும். அப்படியானதொரு சுமூக நிலையேற்பட்டால் முஸ்லீம் மக்கள் திரும்பி வர நாம் அனுமதிப்போம்.

**ஆனந்தி:**

பிரபாகரன் அவர்களே, நாடு எங்கிலும் வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி, தெற்கிலும் சரி இந்தப் போருக்கு முடிவு ஏற்பட வேண்டும், சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கி நிற்கின்றது. இப்படிப்பட்டதோர் சூழ்நிலையில், தெற்கில் வாழும் சாதாரண சிங்கள மக்களுக்கு, அரசியல்வாதிகளை விடுங்கள், சாதாரண சிங்கள பெருங்குடி மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

**தலைவர் பிரபாகரன்:**

சாதாரண சிங்கள மக்கள் போரை விரும்பவில்லை. சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும். இந்தத் தேர்தல் முடிவுகளும் அதனையே நிரூபித்துக் காட்டுகின்றன. நாமும் சமாதானத்தையே விரும்புகின்றோம். நிரந்தரமான சமாதானம் ஏற்பட்டு, மக்கள் எல்லோரும் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதையே விரும்புகின்றோம். இன்று சமாதானத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பது போர். எனவே போர் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜனாதிபதியுடன் செயற்படுவதில் தடை எதுவும் இல்லை

- சந்திரிகா குமாரணதுங்க

"ஜனாதிபதியுடன் இணைந்து செயலாற்றுவதில் தடையெதையும் காணக் கூடியதாக இல்லை என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்."

பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். இப்படியான நல்ல உறவு நிலை மேலும் தொடருமெனத் தெரிவித்த அவர், ஜனாதிபதி சந்தோசமான பாதுகாப்பு அமைச்சருமாவார் எனவும் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கை செலவைக் குறைப்பதற்கும், தகவல் தொடர்புச் சாதனங்களின் சுதந்திரமான இயக்கத்திற்கும் முன்னுரிமை அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ■

# முன்னாள் ஐ.தே.க அமைச்சர்களை விசேட இலஞ்ச கமிசன் விசாரிக்கும்

- அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்

வெகுவிரைவில் நியமிக்கப்பட இருக்கும் விசேட இலஞ்சக் கமிசனால் முன்னாள் அமைச்சர்கள் உட்பட, ஐ.தே.க வின் சிரேஸ்ட உறுப்பினர்கள் விசாரிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள புகார்கள் சம்பந்தமான பைல்கள் இலஞ்ச ஆணையாளரிடம் உள்ளன. இலஞ்ச ஊழல்கள் குறித்து விசாரிப்பதற்கு உயர்மட்ட ஆணைக்குழு ஒன்று நியமிப்பதற்கும் சட்டம் இயற்றப்படும். இந்த ஆணைக்குழு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் புகார்கள் குறித்து விசாரிப்பதற்கு சபாநாயகரின் அனுமதிபெறல் வேண்டும் என்ற தற்போதைய விதி நீக்கப்படும் என்று நீதி அரசியல் விவகார வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கூறியுள்ளார்.

இந்த ஆணைக்குழு மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாகும். இருவர் ஓய்வு பெற்ற சுப்ரீம் கோட் நீதிபதிகளாகவும், மூன்றாவது நபர் விசாரிப்பதில் அனுபவமுள்ளவராகவும் இருப்பார் எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

இந்த ஆணைக்குழுவிற்குப் பூரண அதிகாரங்கள் இருக்கும். இது சுதந்திரமாக இயங்கும் இந்த ஆணைக்குழு பணி புரியும் காலத்தில் ஆணைக்குழுவினரின் சம்பளம் குறைக்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் சொன்னார்.

தனக்குக் கிடைக்கும் புகார்கள் அனைத்தையும் ஆணைக்குழு விசாரிக்கும். விசேட இலஞ்ச ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்று திருமதி சந்திரிகா குமாரணதுங்க, தேர்தல் பிரசாரத்தின் போது கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# ஐ.தே.க. அரசின் மனித உரிமை மீறல்கள் மேலும் அம்பலம்

மாத்தளை வாரியப்பொல பகுதியில் கொக்கோ சாகுபடி செய்யப்பட்டிருந்த காணியில் இருந்து, 3 மனித எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இப்பகுதியில் இன்னொரு 30 எலும்புக்கூடுகளைக் கொண்ட புதைகுழி பற்றிய தகவல் தமக்குக் கிடைத்துள்ளதாகவும், அவ்விடங்களைத் தோண்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும், சிறிலங்காவின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், தொழிலியல் மகளிர் அலுவல்கள் பிரதியமைச்சர் நந்திமித்திர ஏக்கநாயக்கா தெரிவித்துள்ளார். 1990 ஆம் ஆண்டு காலகட்டத்தில், இப்பகுதிகளில் 350 பேர் காணாமல் போனதாகவும் அவற்றில், சிலரது எலும்புக்கூடுகளே இவை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் தோண்டி எடுக்கப்பட்ட 3 எலும்புக்கூடுகள் தொடர்பாக, சாட்சியமளித்த சுந்தரலிங்கம் என்பவர், "1990 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் ஆட்டுக்கு குழை வெட்டச் சென்ற வேளையில், தலையில்லாத 3 சடலங்களைக் கண்டேன். நான் இது பற்றி மாத்தளைப் பொலிசாருக்குத் தகவல் தெரிவித்த பொழுது, அவர்கள் வந்து பார்த்துவிட்டு சடலங்களை புதைத்துவிடுமாறு என்னைப் பணித்தனர். நான் 3 சடலங்களையும் இழுத்துச் சென்று, புதைகுழியில் போட்டு மண்ணால் மூடினேன். இருப்பினும், புதைக்கப்பட்ட சடலத்தின் கையொன்று மேலே நீட்டிக்கொண்டிருந்தது. இதன் மேல் டிரக்டர் மூலம் மண் போட்டு மூடும்படி பணிக்கப்பட்டேன்". எனச் சாட்சியம் கூறியுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தை 17 வருடங்களாகக்கொண்டு நடாத்திய ஐக்கிய தேசிய கட்சியின் பயங்கரவாத போக்கும், மனித உரிமை வன்செயல் கொடுமைகளும் இப்பொழுது தாராளமாக வெளிவரத் தொடங்கியுள்ளன. ■

## 10-வது பாராளுமன்றத்தில் 11 பெண் உறுப்பினர்கள்

பத்தாவது பாராளுமன்றத்தில் மொத்த உறுப்பினர்களில், பதினொரு பெண்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பிரதமர் உட்பட எட்டுப் பேர் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள்.

சந்திரிகா குமாரணதுங்கா, சுமித்திரா பிரியாங்கனி அபேவீர, கேமா ரட்ணாயக, சுமேதா ஜெயசேன, சிறிமனி அத்துலத்முதலி, நிருபமா ராஜபக்ச, பவித்திரா வி வன்னியாராச்சி, சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் பொ.ஐ. முன்னணியிலிருந்தும், ரேணுகா கேரத், ராஜமனோகரி புலேந்திரன், அமரா பியசீலி ரத்னாயக்கா ஆகியோர் ஐ.தே. கவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ■

# திருகோணமலை பள்ளிக்குடியிருப்பில் இராணுவக் காவலரண் தகர்ப்பு

திருகோணமலை பள்ளிக்குடியிருப்பிலுள்ள சிறீலங்கா இராணுவக் காவலரண்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய வெற்றிகரமான தாக்குதலில், மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன், ஆயுதங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க, அனுராதபுர மாவட்டத்தில் உள்ள கெப்பட்டிப்பொல என்ற கிராமத்தில் விடுதலைப் புலிகள் ஊர்காவற்படையினர் மீது நடாத்திய தாக்குதலில், 5 ஊர்காவற்படையினர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# 21-ம் நூற்றாண்டை நோக்கி ஐ.தே.க வளர்க்கப்பட வேண்டும்

- ரணில் விக்கிரமசிங்க

ஐக்கிய தேசியக் கட்சியானது மக்களால் ஏற்கப்படக்கூடியதும் தேர்தலுக்கு முகம் கொடுக்கக் கூடியதும் ஆகும். எனினும், கட்சியை இருநோக்கத்திற்காக மறுபடியும் வளர்க்க வேண்டியுள்ளது. இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜாவத்தை வீதியிலுள்ள அவரது தனிப்பட்ட இல்லத்தில் தம்மைச் சந்தித்த நண்பர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், எமது கட்சியில் குறிப்பிடத்தக்க சில குறைபாடுகள் உள்ளன. எதிர்க்கட்சியாக செயற்படும் போது எமது குறைபாடுகளை திருத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் அதிகமாக இருக்கும். நான் தேர்தல் பிரசாரத்தின் போது அடிக்கடி வலியுறுத்தி வந்ததைப் போல, 21 ஆம் நூற்றாண்டிற்காக எமது சிந்தனையை ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும். முன் நோக்கியே பார்க்க வேண்டும். நாம் ஊக்கம் இழப்பதற்கு எதுவுமில்லை எனவும் குறிப்பிட்டார். ■

## மன்னாரில் இராணுவ அணிமீது தாக்குதல்

மன்னார்ப் பகுதியில் ரோந்து வந்த இராணுவத்தினரை இடைமறித்து, விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில், இரண்டு இராணுவத்தினர் அழிக்கப்பட்டதுடன், மற்றும் சிலர் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலில், ஒரு சிறீலங்கா இராணுவத்தினனைக் காணவில்லை என சிறீலங்கா இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. ■

# மூலப்பொருள் வழங்கல்

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ள உற்பத்தி நிறுவனங்களுக்கு மூலப்பொருட்கள் பெற்று வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஏற்கனவே வழங்கப்பட்ட பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் முகாமைத்துவ, தொழில்நுட்ப ஆலோசனைகள் போன்ற ஒத்தாசைகளுடன் இரு மாதங்களில் மட்டும் ரூபா 17 லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான உள்ளீடுகள் இலாப நோக்கின்றி வழங்கப்பட்டிருக்கின்றன.

எதிர் காலத்திலும் இவ்வாறு உள்ளீடுகள் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளும் தொழில் முயற்சியாளர்கள், இந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ■

# போர் நிறுத்தம்...

வேண்டும். யார் இந்தப் போரை தமிழ்மக்கள் மீது திணித்தார்களோ, அவர்களே இந்தப் போருக்கு முடிவு கட்ட முன்வர வேண்டும். போர் மூலமும், இராணுவ அடக்குமுறை மூலமும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்பதை, சிங்கள தேசம் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்களது நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்வதன் மூலமே, இன்றைய இன நெருக்கடிக்குத் தீர்வு காணலாம். சமாதான வழிமுறைகள் மூலமே இதனைச் சாதிக்கலாம். இதனை, சிங்கள இனவாத அரசுகளுக்கும், இராணுவ வாதிகளுக்கும் சிங்கள மக்களே உணர்த்த வேண்டும். நாம் சிங்கள மக்களை நேசிக்கின்றோம். நாம் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. சிங்கள, தமிழ் மக்களுக்கிடையே எழுந்துள்ள முரண்பாடுகளுக்கும், பகைமைக்கும் இனவாத சக்திகளே காரணம். இனவாத சக்திகளை சிங்கள மக்கள் இனம் கண்டு ஒதுக்கித் தள்ள வேண்டும். அப்பொழுது தான் இந்தத் தீவில் நிரந்தரமான சமாதானம் ஏற்படும். ■

# வடபகுதிக்கு தார் அனுப்ப பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற தாரைக் கொண்டு விடுதலைப் புலிகள் விமான ஓடு பாதை ஒன்றை அமைத்து வருவதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு காரணம் காட்டி வடபகுதிக்கு தாரை அனுப்பி வைப்பதை நிறுத்தியுள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகள் விமான ஓடு பாதையை அமைத்து வருகின்றனரா? என்பது பற்றி விசாரணை நடாத்தப்பட்டு அவ்வாறு இல்லை எனின், தார் வடபகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய யாழ். அரச அதிபர் கொழும்பில் யாழ் மாவட்டத்திற்கென வீதிகள் புனரமைப்புக்கென தேவையான தாரை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலரைச் சந்தித்து அனுமதி கோரிய சமயம் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டதாக அறிய வருகின்றது.

எனவே வீதிகள் திருத்தப்பட்டு அரையும் குறையுமாக உள்ள இவ் வேளையில் பாதுகாப்பு அமைச்சின் இந் நடவடிக்கையானது வீதிகள் புனரமைப்புப் பணியைப் பெரிதும் பாதித்துள்ளது. ■

## என் தாயகம்

சுட்டெரிக்கும் வெய்யிலில்
நிழல் தேடும் கட்டெறும்பு நாம் தானே
நாம் தினம் வடிக்கும் கண்ணீர்
காட்டாற்று வெள்ளம் தானே.
துன்பத்தின் விளிம்பில் நின்று
விழிகலங்கி வாடுவதும் எம்
இனந்தானே,

இழப்புக்களையே இதயத்தில் தாங்கி,
இறந்த காலத்தை எண்ணத்தில் ஏந்தி
மரத்துப் போன மானிடமாய்,
மண்ணிலே ஏங்கிடும் தமிழர் தம்
நிகழ்கால வாழ்வினை நிறைவாக்க
நிதர்சனங்களை கண்ணுற்று இன்புற
விடியலின் கீதத்தில்
விழித்திடும் எம் கருவிழிகள்
விரைவினில் காணவேண்டும்
விடிவு பெற்ற நாடு
அது எம் தாயகம்.

எதிர்கால கனவுகளை
எம் எண்ணத்தில் உருவேற்றி
பொருண்மியத்தில் உயர்
கொடியேற்றி
கல்வியிலே தனிக்கொடி நாட்டி
தரணியிலே புகழ் கொடி பறப்போம்
தங்கத் தமிழ் ஈழமது
என் இனிய தாயகம்.

- கீதப்பிரியா -

www.tamilarangam.net



# மறைந்தும் மறையாத பொதுவுடமையாளர்களும் கலைந்தும் கலையாத சோவியத் சாம்ராச்சியமும்

பாலகுமாரன்

**இந்த நூற்றாண்டின் அதிமுக்கிய நிகழ்வான சோவியத் சாம்ராச்சிய வீழ்ச்சி, 1991ஆம் ஆண்டு நிகழ்ந்தமையை எவரும் எளிதில் மறந்துவிட முடியாது. 1991-ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று மிக்கேல் கோர்ப்பச்சேவ் பதவி விலகினார். மறுநாளே 1992-ம் ஆண்டின் புகழ்மிக்க (சோவியத்) ஒன்றிய உடன்பாடு (Treaty of Union) இல்லாது போயிற்று. அப்போது அதற்குப் பதிலாக 15 சுதந்திரமான தனிநாடுகள் தோற்றம்பெற்றன. இவற்றில் 1940-ம் ஆண்டளவில் சோவியத்தோடு இணைக்கப்பட்ட மூன்று போல்டிக் பகுதிக் குடியரசுகளான எஸ்தோனியா, லிதுவேனியா, லத்வியா ஆகியவை 1991-ம் ஆண்டு செப்டம்பர் மாதமே தமது சுதந்திரத்தை அறிவித்துவிட்டன. பின்னர் ஜோர்ஜியா தவிர்ந்தவை CIS எனப்படும் ஒரு நெகிழ்வான கூட்டமைப்பான, "சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம்" (Common Wealth of Independent Nations) என்று ஒன்றை ருஸ்சியாவோடு ஏற்படுத்தின. இது முன்னைய இரண்டாண்டு வரலாறு. ஆனால், இன்றைய வரலாறு எப்படியிருக்கின்றது?**

## முன்னைய குடியரசுகளில் ருஸ்சியப் படைகள்

இப்போதும் நிலைமைகள் தெளிவடையவில்லை. குழப்பங்கள் தீரவில்லை; முன்னைய சோவியத் ஒன்றியத்தின் சீர்குலைவு முற்றுப் பெற்றதாக இல்லை. வேறு முறைமைகளில் அது உயிர் பெறுவதாகத் தெரிகின்றது; கட்டற்ற சந்தைப் பொருண்மிய ஒழுங்கை நோக்கிய நகர்வு சுமுகமாகவோ, சீராகவோ அமையவில்லை; அது போலவே கிழக்கே விளாடிவெஸ்ரொக்கில் இருந்து மேற்கே லெனின்கிராட் வரை பரந்து உலகின் மொத்த நிலப்பரப்பில் 11. 5 விழுக்காட்டை தன்னுள் அடக்கியுள்ள ருஸ்சியா தனது பழைய சாம்ராச்சிய விரிவாக்கத்தை மறக்கவில்லை; அதன் தலைவர்களான யெல்ட்சினோ அல்லது தற்போது புதிதாக தோற்றம் பெற்றுள்ள தீவிர ருஸ்சிய தேசிய வாதத்தினை பின்பற்றும் விளாடிமிர் சிரினோவ்ஸ்கியோ(**Vladimir Zhirinovsky**)அல்லது இப்போதும் பொது உடமை வழியைப் பின்பற்றும் முன்னைய உப சனாதிபதி அலெக்சாண்டர் ருட்ஸ் கோயோ **(Rutskoi) இவ்விடயத்தில் மட்டும் ஒரே கருத்தையே கொண்டிருக்கிறார்கள்.** ருட்ஸ்கோய் கூறுகிறார்-**"சோவியத் யூனியன் என்பது ருஸ்யாவே".** 1917-ம் ஆண்டு ருஸ்ய தேசத்தைப் பாருங்கள். இப்போது தம்மை சுதந்திர நாடுகளாகக் கூறிக் கொள்பவை என்றும் வரலாற்றில் சுதந்திர நாடுகளாக இருந்தது கிடையாது. எப்போதுமே அவர்கள் ருஸ்சியாவின் ஒரு பகுதியாகவே இருந்துள்ளார்கள். **"-ருஸ்யா என்றால் அது ஒரு மாபெரும் சக்தியல்லவா?"**என்கிறார். இவையெல்லாம் வெறும் வார்த்தைகளாக எண்ணிவிட முடியாது. ருஸ்யப் படைகள் இன்னமும் பல முன்னைய குடியரசுகளில் தரித்து நிற்பதோடு அங்கு தமது மேலாண்மையைக் காட்டி வருகின்றன. பால்டிக் கடலிலிருந்து மத்திய ஆசியா வரை பரந்துள்ள தனது முன்னைய எல்லைகளை மனதிலிருத்தியே அவை செயற்படுகின்றன. இவற்றிற்கு எல்லாம் அடிப்படையாக அமைவது இன்று ருஸ்யாவிற்கு வெளியே 25 மில்லியன் ருஸ்யா இனத்தவர் ஏனைய அயல் பகுதிகளிலேயே வாழ்வது தான். ஏனென்றால், சோவியத்தின் வரலாற்றில் தாயகப் பகுதியிலிருந்து ஏனைய பகுதிகட்கு ருஸ்யர் தொடர்ந்து புலம் பெயர்ந்தமை நடந்துள்ளது. **'ருஸ்யாவின் வரலாறு என்பது தன்னைத் தானே குடியேற்றம் செய்த ஒருநாட்டின் வரலாறு'**என வரலாற்றாளர் குறிப்பிடுவர். எனவே, 70 ஆண்டுகட்கு மேலாக சோவியத்தின் கீழிருந்து இப்போது பிரிந்து தனிநாடாக மாறியோர் தம்மை ருஸ்யாவிலிருந்து முற்றாகத் துண்டிக்க முடியாமல் பொருண்மிய காரணங்களுக்காகத் தவிப்பது -துண்டிக்க விடாமல் ருஸ்யா தனது இன வழி மக்களின் நலன்களைக் காரணமாகப் பயன்படுத்துவதையும் இப்போது கண்முன்னே காணும் காட்சியாகிவிட்டது.

## முன்னைய குடியரசுகளில் ருஸ்யர்களின் நிலை

ஒரு சில புள்ளிவிபரங்களைப் பார்த்தாலே நிலைமைகளின் தீவிரம் புரியும். இன்று மோல்டோவா, கசாக்கித்தான், லட்வியா, எஸ்தோனியா, உக்ரேன் எனப் பல நாடுகளில் சிறுபான்மையாக உள்ள ருஸ்சிய மக்கள் நிலை கேள்விக்குறியாகி விட்டது. எஸ்தோனியாவில் 30 விழுக்காடு, லட்வியாவில் 34 விழுக்காடு, உக்ரேனில் 22 விழுக்காடு, கசாக்கித்தானில் 38 விழுக்காடு என ருஸ்ய மக்களின் குடித்தொகை அளவு அமைந்துள்ளது. இன்று இங்கெல்லாம் ருஸ்ய மக்கள் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளின் பெரும்பான்மையினரால் புறக்கணிக்கப்பட்டும், இவர்கள் ருஸ்யாவின் தலையீட்டுக்கு வழிவகுக்கப்போகும் பகடைகள் எனப் பார்க்கப் படுவதாலும் நிலைமைகள் வெகு வேகமாக மோசமடைகின்றன. இவை காரணமாக ஏற்கனவே 30 லட்சம் ருஸ்ய மக்கள் வாழ முடியாத நிலையில் ருஸ்யா வந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

இப்போது என்னவென்றால், தான் தலையிட்ட நாடுகளில் உள்ள அமெரிக்கரை காப்பாற்றப் போவதாகக் கூறி அமெரிக்கா முன்னர் படைகளை வெளிநாடுகட்கு அனுப்பியது போல் அல்லது கிரனடாவில் தலையிட்டது போல் ருஸ்யாவும் தலையிட வாய்ப்பு உருவாகி விட்டதாகக் கூறப்படுகின்றது. லட்வியாவைப் பார்த்தாலே நிலைமைகள் விளங்கும். இங்குள்ள 3 மில்லியனுக்கும் சற்று குறைவான குடித்தொகையில் ஏறத்தாழ 1 மில்லியன் ருஸ்ய மக்களே. இவர்களில் பெரும்பான்மையோர் லட்வியா முன்னர் சோவியத்தில் இருந்து சுதந்திரம் பெறுவதை விரும்பாமல் எதிர்த்து வாக்களித்தவர்கள். எனவே, இப்பொழுது லட்வியா இவர்கள் மீது மிகக் கடுமையாகப் பழிவாங்குகின்றது. 7 லட்சம் பேர் இன்று குடியுரிமையற்ற மக்களாக -1 லட்சம் தொகை கொண்ட மக்கள் கறுப்புப் புள்ளியிடப்பட்ட கடவுச்சீட்டுகளைக் கொண்டவர்களாக அதாவது, **வேலைவாய்ப்பு, வதிவிட வசதிகள் போன்றவற்றைப் பெற சட்டரீதியான உரித்தற்றவராக மாற்றப்பட்டு விட்டனர். இம்மக்களை 'இறந்தவர்கள் போல்' கணிப்பதாக ருஸ்யா, லட்வியாவை குற்றம் சாட்டுகின்றது.**

இதுபோலவே. முன்னர் மத்திய ஆசியப் பகுதி இசுலாமிய குடியரசுகளில் குடியேறிய ருஸ்ய இனத்தவர், தம்மை அவ்வப் பகுதி மக்களை விட உயர்ந்தவர்களாகக் கருதி நடந்துகொண்டனர். ஆனால், இன்றோ நிலை மாறிவிட்டது. கசாக்கித்தானில் 37 விழுக்காடு ருஸ்ய மக்களும் இப்போது தாம் அவமதிக்கப்படுவதாக உணருகின்றனர். கடையில் பொருள் வாங்கச் சென்றால்கூட, முதலில் கசாக் மக்களுக்கே முன்னுரிமை என்ற நிலை ஏனென்று கேட்டால் **'-இது எனது நாடு'** என கசாக்கித்தானியர் கூறுவதாக இப்பகுதி ருஸ்யத் தலைவர் குறைபட்டார். இவ்வாறாகவே, நிலைமை எல்லா இடங்களிலும் உள்ளது. இவை எல்லாவற்றையும் விட மிக மோசமான முறுகல்நிலை கிறைமியாவில் உள்ளது. 1954-ம் ஆண்டு இச் சிறிய குடாநாட்டை உக்ரேனுக்கு குருஸ்சேவ் நல்லெண்ணம் காரணமாக வழங்கினார். ஆனால், இன்றோ கிறைமியாவில் உள்ள 70 விழுக்காட்டிற்கு மேற்பட்ட ருஸ்சியரின் நிலை பெரும் சிக்கலாகிவிட்டது. முன்னர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட இப்பகுதி மக்கள், உக்ரேனுடன் இப்போது சேர்ந்திருக்க விரும்புகிறார்கள் இல்லை.

கடந்த மாதம் கிறைமியாவின் நாடாளுமன்றம் உக்ரேனில் இருந்து விலகி தன்னாட்சி பெறவேண்டுமென தீர்மானித்தது. உடனே உக்ரேனிய அரசு தீர்மானத்தை மீளப் பெறாவிட்டால் கடும் விளைவுகள் ஏற்படும் என எச்சரித்தது. உடனே ருஸ்யாவும் பதிலுக்கு உக்ரேயினை பொறுமையாக நடக்கும்படி மிரட்டியது. ஏனென்றால், ருஸ்யா இனத்தவர் நலன்களோடு முன்னாள் சோவியத்தின் பாரிய கடற்படையின் கருங்கடல் பிரிவு கடற்படை பணியின் தரிப்பிடமும் கிறைமியாவே ஆகும். இப்போது, இப் பாரிய கடற்படை அணிக்கு ருஸ்யாவும், உக்ரேனும் உரிமை கொண்டாடுகின்றன. இன்றும் இச்சிக்கல் தீரவில்லை. பெரும் கொந்தளிப்பு நிலமையே இன்று கிறைமியப் பகுதியில் உள்ளது.

## முன்னைய சோவியத்துக்களின் பெரும் கவலை

இவ்வாறாக பல மோதல் நிலைகளும், ஆங்காங்கே வெடிக்கும் சிறிய மோதல்களும் தவிர்க்க முடியாத நிலையில் பெரும் தகராறுகளை உருவாக்கும் அபாயம் தொடர்கிறது. அத்தோடு, தஜிகித்தான், ஜோர்ஜியா, அசர்பையான் போன்ற நாடுகளிலே அவ்வவ் நாட்டு ஆட்சியைக் கைப்பற்ற -பிரிந்து போக என பல உள்நாட்டு மோதல்கள் வேறு நடந்து வருகின்றன. இத்தகைய நிலைகளைப் பயன்படுத்தி தனது படைகளின் உதவியைக் கோருமாறு இந்நாடுகளுக்கு ருஸ்யா நிர்ப்பந்தம் கொடுக்கின்றது. எனவே, இப்போது தஜிகித்தானில் நிலைகொண்டுள்ள ருஸ்யப் படை தஜிகித்தான் அரசுக்கு எதிராகப் போரிடும் இசுலாமிய அடிப்படை வாதிகளுக்கு எதிராகப் போரிடுகின்றது. ஆர்மீனியாவோடு மோதலில் ஈடுபட்டிருக்கும் அசர்பையான் எல்லைக்கு தனது படைகளை அனுப்புகின்றது. ஜோர்ஜியாவில் இருந்து பிரிந்து போகப் போராடும் அப்காசிய பிரச்சினையில் தலையிடுகின்றது. அதே சமயம் பைலாறஸ் **(Belarus)** நாடோ பொருண்மியச் சிக்கல்கள் காரணமாக ருஸ்யாவோடு சேர்வதை விரும்பும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. எனவே, இப்போது ருஸ்யப்படைகள் உக்ரேனை, போல்டிக் பகுதியை தவிர்ந்த தமது முன்னைய எல்லையின் விளிம்புகளில் தரிக்கின்றன. இவையெல்லாம் **ருஸ்யப் பெரும் தேசியவாத சிக்கலாக** உருவெடுப்பதாக இப்போது முன்னைய சோவியத் குடியரசுகள் பெரும் கவலை தெரிவிக்கின்றன. ஏனென்றால், சிரினோவ்ஸ்கி போன்றோர் மட்டுமன்றி இப்போது நாடு கடந்த நிலையில் வாழ்ந்து விட்டு ருஸ்யா திரும்பியுள்ள அலெக்ஸ்சாண்டர் சோல் கனிட்சன் (**Solzhenitsyn**) போன்றோரே, **ருஸ்ய மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பல முன்னைய குடியரசுகளை மீண்டும் இணைக்க வேண்டும் என குரல் எழுப்புகின்றமை, இந்நாடுகட்கு பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளன.**

## பொது உடமையாளர்களின் மீள் வருகை

இவ்வாறாக ருஸ்யாவின் நிலையைப் போலவே, முன்னாள் கிழக்கு ஐரோப்பிய பொதுவுடமை வழி நின்ற நாடுகளின் நிலைகளும் விசித்திரமாக உள்ளது. பொதுவுடமையாளர்களைத் தோற்கடித்து அடக்குமுறை ஆட்சிகளை அகற்றி, சனநாயகத்தை மலரச் செய்ததாகக் கூறிக்கொண்ட சனநாயகவாதிகளை இப்போது அப்பகுதி மக்கள் விரும்புகிறார்கள் இல்லை. பொருண்மிய நிலையை உறுதிப்பாடடையச் செய்ய இவர்களால் முடியாததால் **வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்பட்டதாகக் கூறப்பட்ட பொதுவுடமையாளர்கள் இப்போது மீண்டும் தலை காட்டுகின்றார்கள்.**

***'இவர்களின் மீள்வருகை'*** இப்போது பொதுவுடமைக் கட்சி என்றல்லாமல் வேறு சமூக சனநாயகக் கட்சிகள் என்கின்ற பெயர்களில் அமைகின்றது. முதலில் போலந்தில், பின்னர் லிதுவேனியாவில், இப்போது கங்கேரியில் என கம்யூனிஸ்டுக்கள் தலையெடுக்கும் விந்தையும் இப்போது நடக்கின்றது.

கடந்த செப்டம்பர் மாதம் போலந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், இடது சனநாயக ஒன்றியம் என்கிற பெயரில் முன்னைய கம்யூனிஸ்டுக்கள் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததோடு 'சொலிடாரிட்டி' சுதந்திர தொழிற்சங்கத்தை அமைத்து கம்யூனிஸ்டுக்களை தோற்கடித்து மக்கள் ஆதரவோடு சனாதிபதியாகிய லெக்வலேன் சாவை அடுத்த சனாதிபதித் தேர்தலில் இக் கட்சி வேட்பாளரால் தோற்கடிக்கப்பட்டமை இப்போது உறுதியாகிவிட்டது. இது போலவே மிக அண்மையில் -சோவியத்தின் கடும் பிடியில் அகப்பட்டதாகக் கூறப்படும் கங்கேரி தனது முன்னைய ஆட்சியாளர், கங்கேரி சோசலிசக் கட்சி என்கின்ற பெயரில் தேர்தலில் வெற்றி பெற வழி வகுத்துள்ளது. ஆனால், இவர்கள் எல்லாம் பழைய பொதுவுடமைக் கோட்பாடு கூறும் **பொருண்மிய நிலைக்குத் திரும்பப்போவதை இப்போது ஆதரிப்பவர்கள் அல்ல.** புதிய பொருண்மிய மறுசீரமைப்பை, செம்மையாக - சீராக, செய்ய வேண்டும் என்றும், அதே சமயம் பழையனவற்றை முற்றாக புறக்கணிக்கக் கூடாது என்கிற கொள்கையோடு புதிய சமூக சனநாயக தாராண்மை வாதக் கட்சிகளாக தம்மை உருவகப்படுத்துகின்றனர். இவ்வாறாக **மாற்றத்துக்குள் இன்னொரு மாற்றம் இங்கெல்லாம் நிகழ்கின்றது.**

இவ்வாறாக இங்கெல்லாம் நடைபெறும் மாற்றங்கள், இப்போது பலவாறாக விமர்சிக்கப் படுகின்றது. "பொதுவுடமைத் தத்துவத்தின் இடத்தை இப்போது தீவிர தேசியவாதம் எனும் தத்துவம் பிடித்துள்ளதாகச்" சிலர் கருதுகின்றனர். மரணப் படுக்கையில் இருந்தபோது ரிச்சாட் நிக்சன் கூறிய," ருஸ்யா மீண்டும் சாம்பல் மேட்டில் இருந்து மேலெழும்" என்கிற கூற்று பொருள் பொதிந்ததாகவே தெரிவதாக இன்றும் சிலர் கருதுகின்றனர். எது எப்படி இருந்த போதும், முன்னர் கார்ல் மாக்சே கூறிப்பிட்டது போலவே, **மாற்றங்கள் எற்படுவது தவிர்க்க முடியாதவையாகினும், அவை பழமை என்னும் கருப்பைக்குள் இருந்தே பிறக்கின்றன** என்பதே இப்போது மெய்யாகிவிட்டது. ■

## இந்தியாவின்..

இத்தகைய நிலைமைகள் யாவும், இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் பார்வை தொடர்கின்றது என்பதையே வெளிப்படுத்தி நிற்பதாக பலராலும் கருத்து வெளியிடப் படுகின்றது. ■

**வரலாற்றின் குப்பைக்கூடைக்குள் தூக்கிவீசப்பட்டதாகக் கூறப்பட்ட பொதுவுடமையாளர்கள், இப்போது மீண்டும் தலைகாட்டுகின்றனர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அராலி கண்ணிவெடி

# சிறீலங்கா இராணுவத்திற்கு மீளமுடியாத இழப்பு

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மறக்க முடியாத நாட்களில் 08.08.1992 உம் ஒன்று. சிறீலங்காவின் முன்னைநாள் இராணுவ உயர் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் தலைமையின்கீழ், வடபகுதி கடற்படைத்தளபதி, வடபகுதி இராணுவத் தளபதி ஆகியோரை உள்ளடக்கிய உயர்மட்டக்குழு ஒன்று யாழ். குடாநாட்டைத் தாக்கியழித்து, தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு வகுத்த தாக்குதல் திட்டத்தையும், அத்திட்டத்தை உருவாக்கி, செயற்படுத்த இருந்த சிறீலங்காப் படைத்தளபதிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் தவிடுபொடியாக்கிய வெற்றிநாள் அது. இத்தாக்குதல்த் திட்டம் எவ்வாறு தயாரிக்கப்பட்டது, இதனை விடுதலைப் புலிகள் எவ்வாறு ஆணிவேரோடு தகர்த்தெறிந்தனர் என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.**

**1992** ஆகஸ்ட் 7 ஆம் திகதி பிற்பகல் 2.15 மணி அநுராதபுரத்திலிருந்து புறப்பட்ட விமானப்படை விமானம் ஒன்று, பலாலி விமானப்படைத்தளத்தில் இறங்குகிறது. குடாநாடு மீதான பாரிய இராணுவ நடவடிக்கைக்குரிய திட்டத்துடன், அதனுள் இருந்து இறங்குகிறார், சிறீலங்கா இராணுவத்தின் உயர் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ.

பலாலி விமான நிலையத்தில் சிறிதுநேரம் தங்கிவிட்டு, அவர் காரைநகரில் உள்ள கடற்படைத் தளத்திற்கு செல்கின்றார். அங்கு வடபகுதிக் கடற்படைத்தளபதி கொமடோர் ஜெயமகா, வடபகுதி இராணுவத்தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்ன ஆகியோருடன், தனது தாக்குதல் திட்டம் குறித்து கொப்பேகடுவ ஆராயத் தொடங்கினார். திட்டமிடுதல் இரவு 9.30 மணிவரை நீடிக்கின்றது. இதனால், அவர்கள் ஊர்காவற்றுறைக்குச் செல்லும் திட்டத்தை மறுநாளுக்கு ஒத்திவைத்தனர்.

### ஊர்காவற்றுறை சென்றனர்

மறுநாள் காலை 8.45 கொப்பேகடுவ, விமலரட்ன, ஜெயமகா மற்றும் உயர்படை அதிகாரிகள் காரைநகரிலிருந்து படகு மூலம் ஊர்காவற்றுறை நோக்கிப் புறப்பட்டனர். இறங்குதுறையில் முன்னர் அறிவித்தபடி, கேணல் ஆரியரட்ன, கேணல் ஸ்ரிபன் ஆகியோர் இவர்களுக்காகக் காத்திருந்தனர். அங்கு இரு இராணுவ லான்ட்ரோவர் ரக ஜீப் வண்டிகளும் இவர்கள் அனைவரையும் ஏற்றிச் செல்வதற்காக வந்திருந்தன. ஒரு ஜீப் வண்டியில், பிரிகேடியர் விஜய விமலரட்ன சாரதி ஆசனத்தில் ஏறிக் கொள்கிறார். அவரின் அருகே



அராலிக் கண்ணிவெடியில் சிக்கிய லான்ட்ரோவர்.

கொப்பேகடுவ இடதுபுறத்தில் அமர்ந்து கொள்கிறார். மற்றைய வாகனத்தை கேணல் ஆரியரட்ன பொறுப்பெடுத்துக்கொண்டார். கடற்படை ஜீப் வண்டியை கடற்படைச் சாரதி ஒருவர் செலுத்துவதற்கு ஆயத்தமானார்.

எஞ்சிய அனைவரும், மூன்று ஜீப் வண்டிகளினதும் பின் ஆசனங்களிலும் முன்னேயுள்ள ஆசனங்களிலும் அமர்ந்து கொண்டனர்.

### அராலி நோக்கி

சிறீலங்கா படை அதிகாரிகளையும் சுமந்துகொண்டு, மூன்று ஜீப் வண்டிகளும் புறப்பட்டன. ஊர்காவற்றுறை -மண்டைதீவு பிரதான பாதையில் விரைந்துகொண்டிருந்தன ஜீப் வண்டிகள். அராலி முனையை ஜீப் வண்டிகள் அண்மித்துக்கொண்டிருந்த சமயத்தில், விஜய விமலரட்ன தமது வாகனத்தின் முன்பக்க வெளிச்சங்கள் மூலம் மற்றைய இரு ஜீப் வண்டிகளையும் நிறுத்துமாறு சைகை காட்டினார். வாகனங்கள் மூன்றும் நின்றன. மூன்று வாகனங்கள் இப்படியே சென்றால், மறுகரையிலிருந்து கண்காணித்துக்கொண்டிருக்கும்

> **குடாநாட்டின் மீது தாக்குதலை ஆரம்பிக்க நிமிடங்களை எண்ணிக்கொண்டிருந்த அதிகாரிகளின் சடலங்கள் எண்ணப்பட்டு, பின் உலங்குவானூர்தியில் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தன.**

விடுதலைப் புலிகள், முக்கிய அதிகாரிகள்தான் ஜீப் வண்டியில் வருகின்றனர் என்பதை உணர்ந்து, எறிகணைத் தாக்குதல் நடத்தலாம் என விமலரட்னா கொப்பேகடுவவிற்கு விளக்கினார். அதை அவரும் ஏற்றுக்கொண்டார்.

### ஒரே ஜீப்பில் பயணம்

இதையடுத்து, ஒரு வாகனத்தில் செல்வது என முடிவாகியது. மீண்டும் சாரதி ஆசனத்திலேயே விஜய விமலரட்ன இருந்துகொண்டார். பின்னால் வந்த, கடற்படை ஜீப்பிலிருந்த வடபகுதி கடற்படைத் தளபதி கொமடோர் ஜெயமகா, முன் ஆசனத்தில் விமலரட்னவுக்கும் கொப்பேகடுவவிற்கும் இடையில் வந்து அமர்கிறார். கேணல் ஆரியரட்ன, கேணல் ஸ்ரிபன், கேணல் பலிப்பான, லெப். லங்கா திலக, லெப். விஜேபுர ஆகியோர் ஜீப் பின் பின் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். விமலரட்னவின் மெய்ப்பாதுகாவலர் சிப்பாய் உபாலி, ஜீப் வண்டியின் பின்புற மிதிபலகையில் ஏறி

**துஷ்யந்தன்**

நின்று கொண்டார். இந்நிலையில், ஜீப் வண்டி நிரம்பி வழியவே ஏனையோர்களை அங்கு தங்கிநிற்குமாறு கொப்பேகடுவ பணித்தார். அதேசமயம், அங்குநின்ற அதிகாரி ஒருவரிடமிருந்து தீவக குடாநாட்டு வரைபடத்தையும், பைனாகுளோரையும் எடுத்துக்கொண்ட கொப்பேகடுவ அராலிமுனைக்குச் செல்லும் தங்களை அழைத்துவர உலங்குவானூர்தி ஒன்றிற்கு அறிவிக்கும்படியும் அவ்வதிகாரியிடம் கேட்டுக்கொண்டார். ஜீப் புறப்பட்டது. சில நிமிடங்களில், அராலிமுனையைச் சென்றடைந்தது. அனைவரும் இறங்கிக்கொண்டனர்.

### அராலியில் ஆய்வு

அதிகாரிகள், தாம் முதல் தினம் காரைநகரில் கலந்தாலோசித்த இராணுவத்திட்டத்தை எவ்வாறு ஆரம்பிப்பது என்பது குறித்து அப்பகுதியில் நின்று ஆராய்ந்தனர். நிலத்தோற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது. அராலிமுனையில் இருந்து 'ஒபரேசன் கௌன்ட்டவுன்' என்ற கொப்பேகடுவவின் குடாநாடுமீதான பாரிய நடவடிக்கையை ஆரம்பிப்பது என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. மண்டைதீவிலிருந்து ஒரு பாலத்தை அமைத்து, நகரப்பகுதியைத் தாக்கலாம் என விமலரட்ன தனது யோசனையையும் குறிப்பிட்டார். தமது திட்டம் - நிறைவேறப் போகின்றது; குடாநாடு தம்மிடம் வீழ்ச்சியுறப் போகின்றது என்ற பெரிய திருப்தியுடனும், மகிழ்ச்சியுடனும் அனைவரும் ஜீப்பில் மீண்டும் ஏறுகின்றனர். காலை 10 மணியாகின்றது. UHA 8752 என்ற இலக்கமுடைய அந்தப் பச்சை நிற லாண்ட்ரோவர் ரக ஜீப் தனது 'இறுதிப் பயணத்தை' ஆரம்பிக்கின்றது.

அராலியில் இருந்து, பிரதான பாதை வழியாக வந்த ஜீப் திடீரென விஜய விமலரட்னவினால் பிரதான பாதையுடன் சமாந்தரமாகச் செல்லும் குறுகிய பாதைக்கு திசை திருப்பப்படுகின்றது. இவர்கள் ஆரம்பத்தில், இறக்கிவிட்டுச்சென்ற ஏனைய படை அதிகாரிகளுக்கு ஜீப் திரும்பி வருவது தெரிகின்றது. கொப்பேகடுவவை எதிர்கொள்ள மகிழ்ச்சியுடன் அவர்கள் அனைவரும் தயாராகின்றனர். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றைய இரு ஜீப் வண்டிகளும் சாரதிகளால் இயக்கம் செய்யப்படுகின்றன. சில அதிகாரிகள் விமலரட்ன ஏன் ஜீப் வண்டியை பிரதான பாதையைவிட்டு விலக்கி, குறுகிய பாதையூடாக வருகிறார் என்று குழம்பி நிற்கின்றனர். கொப்பேகடுவவின் ஜீப் அவர்களை நெருங்கிக்கொண்டிருக்கின்றது. இன்னும் 200 மீற்றர் தூரமே உள்ளது அவர்களை ஜீப் அண்மிக்க.......

### வெடித்தது கண்ணிவெடி

அத்தீவை உலுக்கியபடி பாரிய வெடியோசை. மண்ணும் தீயுமாக செந்நிறக் கரும்புகை பல அடி உயரத்திற்கு எழுகிறது. கூடவே அந்த ஜீப் வண்டியும் எழுகிறது. அதனுடன் கூடவே அந்த சிறீலங்கா இராணுவ அதிகாரிகளும் மேலே செல்கின்றனர். இமைக்கும் பொழுதில், அனைத்தும் நடந்தேறிவிட்டது. புகைமண்டலம் அடங்கியபோது, ஜீப்பின் பாகங்களே எங்கும் காணப்பட்டன. அதிகாரிகள் நாலாபுறமும் பல அடி தூரத்தில், இரத்தம்தோய இறந்து கிடந்தனர். கண்ணிவெடி தனது பணியை செவ்வனே செய்து முடித்து, ஓய்ந்தது. இவர்களை வரவேற்க காத்திருந்த மற்றைய அதிகாரிகளின் கண்முன் நடந்த இந்த சம்பவத்தினால், அவர்கள் திக்பிரமை பிடித்து நின்றனர். சில நிமிடங்களின்பின், தம்மை சுதாகரித்துக்கொண்ட அவர்களில் ஒருவர், உலங்குவானூர்தியை விரைந்துவருமாறு வானொலி செய்தியனுப்பினார். அதன்பின் அவர்கள், சிதறிய ஜீப்பிலிருந்து அதிகாரிகளைத் தேடினர்.

முதலில் அகப்பட்டவர் கொப்பேகடுவ. வெடிப்பு இடம்பெற்ற இடத்திலிருந்து எட்டு அடிக்கு அப்பால் அவர் கிடந்தார். அவரில் உயிர் இருந்தது. வானத்தைப் பார்த்தபடிகிடந்த அவர், சிரமப்பட்டு மூச்சிழுத்தபடி காணப்பட்டார். சிறிது தூரத்திற்கு அப்பால், கொமடோர் ஜெயமகா கிடந்தார். இவருக்கு அருகில், பிரிகேடியர் விமலரட்ன உடல் சிதைந்து கிடந்தார். அவரின் தலையைக் காணவில்லை. இச்சமயத்தில் உலங்குவானூர்தி வந்துசேர்ந்தது. உயிருடன் காணப்பட்ட கொப்பேகடுவவும், ஜெயமகாவும் முதலில் உலங்குவானூர்தியில் ஏற்றப்பட்டனர். அதேசமயம், மற்றுமோர் உலங்குவானூர்தியும் வந்துசேர்ந்தது. குடாநாட்டின் மீது தாக்குதலை ஆரம்பிக்க நிமிடங்களை எண்ணிக்கொண்டிருந்த அதிகாரிகளின் சடலங்கள் எண்ணப்பட்டு பின், அவ்வுலங்குவானூர்தியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன.



கொப்பேகடுவ

உலங்குவானூர்தியில் ஏற்றப்பட்டு சிறிதுநேரத்தில், ஜெயமகாவும் உயிரிழந்தார். படுகாயமடைந்த சிப்பாய் உபாலியும், குற்றுயிராக இருந்த கொப்பேகடுவவும் பலாலி தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு இராணுவ வைத்தியர்கள் அளித்த முதலுதவி சிகிச்சை

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

### அந்த... சப்தம்!

ஒரு சப்தம்_
ஒரேயொரு சப்தம்
பூமி, வானம்
அதிர்ந்தன_
முகில்களை கலைய வைத்த
அதிர்வு_
ஒன்பது அரக்கர்
ஒரே நிமிசத்தில்
உயிர்விட்டனர்
உலகிற்கு
உன்னதமான செய்தி
சொன்ன

நிகழ்வு_
இந்த மண்
புளகத்தில் புல்லரித்துக்
கொண்டது.

அந்த சப்தம்
இந்த தேசத்தின்
பூபாளமானது_

- மானிலா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீங்காத

## ஆனையிறவு ஆ

"முப்படையுடனும் போராடும் ஆற்றலை ஆனையிறவு மோதல் எமக்கு வழங்கியது. சிலாவத்துறையில் நாம் சிறிது படித்திருந்தாலும், ஆனையிறவிலேதான் முழுமையான பாடம் படித்தோம்".

வரலாற்றுப் புகழ்மிக்கதும், உலக வரைபடத்தில் தமிழீழம் எங்கே இருக்கின்றது என்று உலக நாடுகளைத் தேடவைத்ததும், இலங்கையிலே இரண்டு மரபு வழி இராணுவங்கள் சண்டையிட்டன என்று எல்லோரையும் பேசவைத்ததுமான ஆகாய, கடல், வெளிச் சமரின்போது, விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்த ஜெயந்தி அவர்கள், 'சுதந்திரப் பறவைகள்' இதழுக்கு அளித்த நேர்காணலின்போது மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இந்த வரலாற்றுப் புகழ்மிக்க, வீரதீரம் நிறைந்த மோதலின் போது, நாம் பல திறமையான போராளிகளை இழந்தோம். அவர்களில் சிலரை இங்கே நினைவு கூருகிறோம்.

### கப்டன் தமயந்தி



ஆனையிறவைத் தாக்குவதற்கான ஆரம்ப வேலைகள் நடந்துகொண்டிருந்தன:

"வெற்றியோடை திரும்பி வரவேணும் தமயா".

தமயாவின் உயிர்த்தோழி சொல்கிறாள்.

"நான் சாகமாட்டன். ஆனையிறவைப் பிடிச்சு, இயக்கச்சி ரோட்டாலை என்ரை குறுப்பைக் கூட்டிக்கொண்டு நடந்து வருவன். அப்ப பார்".

தோழிக்கு உறுதி கூறுகிறாள் தமயா.

தனது துப்பாக்கியைத் துடைக்கும்போது,

"இந்தமுறை மாத்திரம்தானே பழைய ரைபிள். ஆனையிறவில பொயின்ரை அடிச்சு, நாலைஞ்சு ரைபிள் எடுப்பன். பிறகு ஒவ்வொரு சண்டைக்கும் ஒவ்வொரு ரைபிளைக்கொண்டு போவன்".
என்று சொல்லிச் சொல்லித் துடைத்தாள்.

தாக்குதலை ஆரம்பிக்குமாறு வோக்கியில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எமது பகுதியினர் தாக்குதலை ஆரம்பித்தனர். தமயாவுக்குக் காட்டப்பட்ட எதிரியின் காவலரணிலிருந்து 50 கலிபர் துப்பாக்கியால் எதிரி சுட்டுக்கொண்டிருந்தான். தமயா தாக்கவேண்டிய காவலரணுக்கு முன்னால், பாதுகாப்புக்காக இராணுவத்தினர் மண்மேடு அமைத்திருந்தனர்.

"மண்மேட்டுக்குப் போகவேண்டாம்" என்று, அவளுக்குத் தொடர்ந்து வோக்கியில் சொல்லப்பட்டுக்கொண்டிருந்தது.

தமயா மண்மேட்டின் மேலேறிக் காவலரணுள் புக முயற்சிக்கையில், எதிரியின் சரமாரியான ரவைத் தாக்குதலால் மண்மேட்டிலேயே குப்புற விழுந்தாள். அவளுடன் சென்ற இருவரும் கூட, தமயா மாதிரியே மண்மேட்டில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். மரணத்திலும்கூட தமயா தன் ரீ 81 ஐப் பிரியவில்லை. அதை அணைத்தபடியே குப்புறக் கிடந்தாள்.

### கப்டன் விஜிதா

அரசியல் வேலைக்கென சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட்ட இவள், 1990 இன் ஆரம்பப் பகுதியில், தென்மராட்சிப் பிரிவில் கப்டன் அமுதினியுடன் அரசியல் வேலையில் ஈடுபட்டாள். 1990 இன் பிற்பகுதியில் உரும்பிராய் பிரதேசத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள்.

எந்த வேலையையும், பிரச்சினைகளையும் நிதானமாக அணுகி, பொறுமையாகச் செய்து முடிப்பது அவள் வழக்கம். இவளது கொப்பிகளில், பைல்களில் எல்லாம் தலைவரின் படம் ஒட்டப்பட்டு, 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததே' என்ற குறள் எழுதப்பட்டிருக்கும்.

கோட்டையில் புலிகளுக்கும் சிறிலங்காப் படைகளுக்கும் இடையே உக்கிரமான சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த போது, எமது போராளிகளின் பசிதீர்க்க, அவ்வளவு குண்டுவீச்சுகளுக்கும் எறிகணைகளுக்கும் மத்தியில் உலர் உணவுப்பெட்டியை மிதிவண்டியில் கட்டியபடி, வெறிச்சோடிய இடிபாடுகள் நிறைந்த யாழ். நகர வீதியூடாக எத்தனையோ முறைகள் கோட்டையை நோக்கிப் போயிருக்கிறாள். ஆனையிறவிலே பதுங்கு குழி அமைக்கப் பெண்களை அழைத்துச் சென்றிருக்கின்றாள்.



இறுதியில் ஆகாய, கடல், வெளிச் சமரின்போது கட்டைக்காட்டில் இடம்பெற்ற மோதலில், தான் பிறந்த பொன் நாட்டுக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டாள்.

### கப்டன் வானதி, கப்டன் கஸ்தூரி

ஆனையிறவுச் சண்டையிலே இரண்டு கவிஞர்களை நாங்கள் இழந்து விட்டோம். காட்டின் பயிற்சித்தள வாழ்க்கையிலிருந்து ஆனையிறவில் வீரச்சாவடையும் வரை, இவர்களின் கவிக்குரல்கள் ஒலிக்காத இடமில்லை.



கப்டனி வானதி

சிலாவத்துறை இராணுவத்தளத்தை நாம் தாக்கிக்கொண்டிருக்கின்றோம். முப்படைகளுக்கும் ஈடுகொடுத்தபடி, முன்னேறிக்கொண்டிருக்கின்றார்கள் எமது வீரர்கள். எமது போராளிகள் விழ, விழ விடுதலையின் வேகம் அதிகரிக்கின்றது. வானதியக்கா தனது குழுவின் சகல போராளிகளையும் இழந்துவிட்டாள். வேதனைதந்த வேகத்தினால் மிகவும் முன்னே சென்றுவிட்டாள். தாக்குதலில் அடுத்த நடவடிக்கையாக, கரும்புலி மேஜர் டாம்போ தன் வாகனத்துடன் உள்ளே நுழையப் போவதாக அறிவிக்கப்படுகின்றது. எல்லோரையும் சற்றுப் பின்னுக்கு வந்து காப்பு எடுக்குமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. எல்லோரும் நிலை எடுத்துவிட்டார்கள். வானதி அக்கா மட்டும் இன்னமும் நிலை எடுக்கவில்லை.

"பிள்ளைகள் எல்லோரும் போய் விட்டார்கள். நான் என்ரை பொயின்ரைப் பிடிக்காமல் திரும்பமாட்டன்".

இது வானதியக்காவின் பதில் அறிவிப்பு.

நிலை எடுக்குமாறு கட்டளைகளையும் 'ப்ளீஸ் அவுட்' என்ற பதிலையும் மாறி, மாறி வோக்கிகள் அறிவிக்கின்றன. இறுதியில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் பொறுப்பாளராக இருந்தவர் "வானதி, நீங்கள் அந்த இடத்திலேயே நில்லுங்கள். நான் அங்கே வருகின்றேன்" என்று அறிவிக்கின்றார். வானதி அக்காவுக்குத் தெரியும், எங்கள் தலைமைகளுக்குத் தமது உயிர்களைவிட தங்கள் போராளிகளின் உயிர்கள்தான் முக்கியம் என்பது. உடனே தான் நிலை எடுப்பதாக அறிவிக்கின்றாள். தனது மேலோங்கிய விடுதலை உணர்வின் முன்னும், தனது தலைமைக்கு அவள் கொடுத்த மரியாதை இது.

கஸ்தூரி புலிகளின் குரல் வானொலியின் தொடர்நாடகமான 'சிந்தாமணி'யில் ஆச்சியாகக் குரல் கொடுத்தாள். கலை, பண்பாட்டுப் பிரிவின் தெருக்கூத்தில் போராளியாகப் பாத்திரமேற்றாள். 'களத்தில் காத்தான்' சிந்து நடைக்கூத்தில் இந்தியச் சிப்பாயாக வந்து, எமது மக்கள் இந்திய இராணுவத்தால்பட்ட அவலங்களைத் தெளிவுபடுத்தினாள். எந்தப் பாத்திரத்தைக் கஸ்தூரிக்குக் கொடுத்தாலும், அந்தப் பாத்திரம் கஸ்தூரியினால் சிறப்புப்பெற்றுத்தான் ஆகவேண்டும். இது கஸ்தூரியின் திறமையின் வெளிப்பாடு. இன்று எம்மக்கள் அந்தப் பாத்திரங்களைப் பேசிக்கொள்கின்றார்கள். அந்தக் குரலை - முகங்களை மீண்டும் பார்க்கத் துடிக்கின்றார்கள்.

இந்திய அரசின் நயவஞ்சகத்தால் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பன்னிரு வேங்கைகளுக்கும் முதலாம் ஆண்டு நினைவுக் கூட்டம், தீருவில் மைதானத்தில் நடைபெறுகிறது. சுற்றிவர வல்லாதிக்கத்தின் துப்பாக்கி வேலிகள். ஆனாலும் எம்மக்கள் துணிந்திருந்தார்கள். ஓங்கி ஒலிக்கிறது வானதியக்காவின் விடுதலைக் குரல்.

நல்லூர் வீதியில்... பார்க்குமிடமெங்கும் மனிதத் தலைகள். மேடையில் திலீபன் அண்ணா. திலீபன் அண்ணாவின் உண்ணாவிரதத்தை ஆதரித்து மேடையில் பேச்சுக்கள்...



கப்டன் கஸ்தூரி

கவிதைகள்... ஒரு பெண் கவிக்குரல் உண்மையை உரைக்கின்றது. உள்ளத்திலிருந்து அது வருகின்றது. திலீபன் அண்ணா மீண்டும் வாசிக்கச் சொல்லுகின்றார். எல்லாப் போராளிகளும் ஏக்கத்தோடு திலீபன் அண்ணாவைப் பார்க்கச் செல்லுகின்றார்கள். அத்தனை மக்களும் கண்ணீர்மல்க விம்முகிறார்கள். இது அந்தக் கவிதைக்கு மட்டுமே உரித்தான சக்தி. இந்தக் கவிதைதான் கஸ்தூரியை எல்லோருக்கும் இனங்காட்டியது.

தனது புதிய சீருடையை
"இங்கே யாருக்காவது கொடுங்கள்"
என்று வைத்துவிட்டுச் சென்ற கஸ்தூரியையும்,

தன் பிள்ளைகளோடு ஆண்டியாகவே திரிந்த வானதியக்காவையும் எம் கண்கள் தேடுகின்றன.

வசதியை இவர்கள் தேடியதே இல்லை. மாணவர் அமைப்பு வேலைகள் செய்யும்போது, காங்கேசன்துறையிலிருந்து பூம்புகார் வரை வானதியக்காவின் மிதிவண்டி ஓடும். தளத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று சும்மா நின்றாலும், ஒரு மிதிவண்டியின் துணைபோதும் கஸ்தூரிக்கு. வேலையை மட்டும்தான் அவர்கள் தேடினார்கள்.

கடைசியாகச் சண்டைக்குப் புறப்படும்போது,
"இந்த ஆனையிறவு முகாமை எப்பிடியும் நாங்கள் பிடிக்கவேணும்"
இது வானதியக்கா.

"சண்டையில் எல்லோரும் இரண்டு ஆயுதம் எடுத்தால், நான் நாலு ஆயுதம் எடுக்கவேண்டும். திரும்பி வந்தால் நாடகம் போடவேண்டும். புதிய பாடல்கள்கொண்ட ஒலிப்பதிவு நாடா ஒன்றை மகளிர் படையணி வெளியிடவேண்டும்"
இது கஸ்தூரி.

### 2 ஆம் லெப். அமராவதி

அமரா, அடிக்கடி சொல்லிக் கொள்வாள், "எங்கட வீட்டையும் எல்லாரும் புலிக்குடும்பம் என்று சொல்லவேணும்".

இதுதான் அவளுடைய கனவாக இருந்தது.

போராட்டத்தைப்பற்றிப் புரியாத வயதிலும், புலிகள் தமக்கு நன்மைதான் புரிகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்ட அவளது மனம் மெல்ல மெல்லப் போராட்டம் பற்றி அறிய முற்பட்டது.

தேசவிரோதியான அவளது மாமனைத் தேடிப் புலிகள் வீட்டுக்கு வந்தால், இவள் புலிகளுக்குக் காவலாக வெளியில் நிற்பாள்.

காண்கின்ற ஒவ்வொரு புலிவீரர்களையும் "என்னை இயக்கத்துக்குக் கொண்டுபோய் விடுங்கோ"



என்று கேட்டுக்கொண்டே இருப்பாள். இவளின் அளவைப் பார்த்துவிட்டு, அவர்கள் சிரித்தபடி "பிறகு கூட்டிக்கொண்டுபோறம்" என்று விட்டுப் போய்விடுவார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவலைகள்

## காயம், கடல், வெளிச் சமர்

எமது அணிகள் எதிரியைத் தாக்குவதற்கென உப்பளம் சுற்றுலா விடுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. எமக்கு வழிகாட்டியவாறு ஒரு போராளி முன்னுக்குச் சென்றுகொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து எங்கள் குழுக்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. மேலே விமானங்கள் குண்டுகளை வீசியபடி... கீழே எறிகணைகளும் ரவைகளும்... இத்தனைக்கும் மத்தியில் போய்க்கொண்டிருந்த போது, எம்மில் யாரோ ஒருவருடைய கையிலிருந்த மின் ஒளிர்விளக்கு (ரோச் லைற்) ஒளிர்ந்ததை, மேலே சுற்றிய வேவுவிமானம் கவனித்திருக்க வேண்டும். குண்டுவீச்சு விமானம் ஒன்று எம்மைநோக்கிக் குண்டுகளை வீச ஆரம்பித்தது. இத்தாக்குதலில் வழிகாட்டியின் முகத்தில் காயம் ஏற்பட்டது. ஆனாலும், அவர் எம்மை எமக்குரிய இடம்வரை கூட்டிப்போனார்.



குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும், நாம் முன்னே இறங்குவதற்குத் தயாராகினோம். எமது குழு ஒன்றும், ஆண் போராளிகளின் குழு ஒன்றும் முதலில் இறங்கியது. எதிரியின் பலமான தாக்குதலின் மத்தியிலே நாம் முன்னேறினோம். பலர் காயம் அடைந்தார்கள். பலரை நாம் இழந்தோம். ஆனாலும், நாம் எவ்வளவு தூரம் முன்னேற முடியுமோ, அவ்வளவு தூரம் வரை முன்னேறினோம்.

இந்நேரம் எமக்கு முன்னால் போன குழுவின் வோக்கி, எமக்குரிய இலக்கு எம்மால் கைப்பற்றப்பட்ட செய்தியை அறிவித்தது. இராணுவத்தினர் பின்வாங்கி உள்ளே ஓடிவிட்டார்கள். ஏனையோர் எமது தாக்குதலுக்கு ஆளாகி இறந்து போனார்கள்.

இதன்போது, மிகவும் சிக்கலான நிலை எமது பெண் போராளிகளின் குழுக்களில் ஒன்றுக்கு ஏற்பட்டது. எதிரியிடமிருந்து எப்பக்கத்தாலும் தாக்குதல் வரக்கூடிய இடத்தில் அந்தக் குழு நின்றது. நல்ல வெளியான இடம். அப்படியிருந்தும், எமது தாக்குதலை நாம் நிறுத்தவில்லை. சிலரது குழுக்கள் தாக்கிக்கொண்டிருக்க, முன்னே சென்ற குழுக்களில் இழப்புக்கள் ஏற்பட,



ஏனைய குழுக்களும் முன்னேறத் தொடங்கின. இத்தனை சிக்கல்களுக்கும் பேரிழப்புகளுக்கும் மத்தியில்தான் நாம் சுற்றுலா விடுதியைக் கைப்பற்றினோம்.

அடுத்தநாள் இயக்கச்சிப் பக்கமாக எமது தாக்குதல் நடத்தப்பட்டது.

அதன் பின்னர், இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிக் கடற்கரைகளில் கடற்படகுகள் மூலம் மேலதிக துருப்புகள் தரையிறங்கின. அவர்கள் மீது எங்களது அணிகள் தொடர்ச்சியாகத் தாக்கிக்கொண்டிருந்தன. இதில் மார்கிரட்டின் அணிதான் எல்லோருக்கும் முன்னே நின்றது. இந்தச் சண்டையில் அவர் வீரச்சாவடைந்தார். பலர் காயமடைந்தனர். இதைத் தொடர்ந்து பின்னே நின்ற எமதணிகள் சில முன்னே வர, முன்னே நின்ற அணிகள் பின்னே அழைக்கப்பட, சண்டை தொடர்ந்தது.

**தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...**

ஆனால், எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியிலும் விடாப்பிடியாக நின்று, 1989 இன் நடுப்பகுதியில் தன்னை இயக்கத்துடன் இணைத்துக்கொண்டாள்.

பயிற்சிக் காலத்தின்போது ஒரு நாள், இவளை "மரம்தூக்கி வாருங்கள்" என்று பயிற்சியாளர் சொன்னபோது,
"ஏன்? நான் உங்களுக்கு மரம் தூக்கவே வந்தனான்? றெயினிங் எடுக்கவல்லவோ வந்தனான்" என்று கேட்டவளிடம்,
"இதுவும் பயிற்சிதான் அமரா. எங்களுக்குத் தேவையானதை நாங்கள்தான் தூக்கிவரவேணும் என்றதும், "சரி தூக்கிவாறன்"
என்றுவிட்டு, மரத்தைத் தூக்கி வந்தாள். இந்தத் துடுக்குத்தனமும் சிறுபிள்ளைத்தனமுமான பேச்சும் இறுதிவரை இவளுடன் கூடவே இருந்தவை.

"எனக்கு ஒரு ஆயுதமும் வேண்டாம். ரெண்டு குண்டு தாங்கோ. குண்டோட போய்ச் சண்டையில் நின்று, எனக்கு ரீ 81 எடுக்கிறன்".
என்று தன்னம்பிக்கையோடு கூறினாள்.

இறுதியாக ஆனையிறவு அடிபாட்டின் போதும்,
"ஆமி கட்டாயம் ஓடுவான். என்ரை கையால் ஆயுதம் எடுத்து, அண்ணைக்குக் குடுப்பன்" என்று சொல்லிக்கொண்டு, அதே கனவோடுதான் விசேட பயிற்சியையும் பெற்றுக்கொண்டாள். சண்டைக்கும் போனாள். உல்லாசவிடுதி மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்தாள்.

### கப்டன் லக்சி



பலாலி இராணுவத்தளத்தைக் காவல்காத்தவேளையில், தனது பொறுப்பில் விடப்பட்ட எல்லாக் காவல் அரண்களுக்கும் மாறிமாறிச் சென்று, போராளிகளை உற்சாகப்படுத்தி, காவலைப் பலப்படுத்திக்கொண்டிருப்பாள். அடிக்கடி எதிரி அரண்களை இரகசியமாக நெருங்கி, அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, இராணுவத்தினரை எந்த நேரமும் பதற்றத்திற்குள் வைத்திருப்பாள்.

இவ்விதமாக லக்சியின் அணி நகர்ந்துசென்று, இராணுவத்தின் மீது தாக்குதலை நடத்தும். ஒரு கட்டடத்துள் ஒருநாள், இவர்களுக்குத் தெரியாமல் இராணுவத்தினர் வந்து, தூரக்கட்டுப்பாட்டில் இயங்கும் கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டுச் சென்று விட்டார்கள்.

அடுத்தநாள் லக்சி வழமை போலவே தன்னுடன் இரு போராளிகளையும் அழைத்துக் கொண்டு கட்டடத்திற்குக்கிட்டே போனவள், சந்தேகம் அடைந்து கவனமாகச் சென்றபோது, ஒரு வயர்த்துண்டு கண்ணில்பட்டது. உடனடியாகவே வயரைக் கத்தரித்து, புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளையும் எடுத்துக் கொண்டு, எமது அரணுக்கு வந்துவிட்டாள். இவளுடைய துணிகரமான செயற்பாடுகளுக்கு இது உதாரணமாகும்.

வீட்டுக்கு விடுமுறையிலே போய் வருமாறு எத்தனையோ தடவை சொன்னபோதும், "ஆனையிறவுச் சண்டை முடியப்போறன்" என்றாள்.

ஆனாள்...

சண்டை ஓய்ந்தபோது அவளில்லை.

### கப்டன் திலகா

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு மோதலின் கடைசிக்கட்டம். திலகா தனது அணியுடன் களம் புகுந்தாள். அகிலன் வெட்டையில் நின்ற இராணுவம் ஆனையிறவை நோக்கி முன்னேறத் தொடங்கியது. புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் கடும்மோதல்



வெடித்தது. இராணுவம் அங்குலம் அங்குலமாக (எம்மிடம் அடிவாங்கியபடி) முன்னேற முயன்றது. இராணுவத்தினரின் நகர்வுகளுக்கு ஏற்றவகையில் திலகா தனது அணியின் வியூகங்களை மாற்றி, மாற்றியமைத்து போரிட்டுக்கொண்டிருந்தாள். இராணுவத்தரப்பில் பலரை நாம் வீழ்த்தியபோதும், எம்பக்கமும் இழப்புக்கள் அதிகமாகவே இருந்தது. களத்தில் நிற்கும் எம்மவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனாலும், இராணுவத்தினரது நகர்வு தடுக்கப்படவேண்டும். திலகா உடனேயே தொலைத்தொடர்புசாதனம் மூலம் தனது குழுவின் அணித்தலைவர்களை அழைத்தாள்.
"முன்னுக்குப் போங்கோ, சளைக்காமல் அடிபடுங்கோ, வீரமரணமடைந்த ஒவ்வொரு போராளியையும் மனதில நினைச்சுக்கொண்டு போங்கோ, போய் அடிபடுங்கோ", என்று திரும்பத் திரும்பச்சொல்லி தன் குழுவை உற்சாகப்படுத்திக்கொண்டு சண்டைக்குத் தலைமை தாங்கினாள். சண்டையும் தீவிரமடைந்தது.

இராணுவத்தினரின் துப்பாக்கி ஒன்றிலிருந்து புறப்பட்ட ரவை திலகாவைத் துளைத்துச்சென்றது. தரையில்படாமல் பறப்பது போல் ஓடுகின்ற, திருமலை மண்பெற்ற அந்தத் தவப்புதல்வி அந்தப் பெருமணல் வெளியிலே சாய்ந்தாள்.

அரை மயக்கத்திலிருந்தபோதும் அவள் வாய்; "செத்த ஒவ்வொரு போராளியையும் நினையுங்கோ. போய் அடிபடுங்கோ", என்றே கட்டளை இட்டுக்கொண்டிருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## சந்திரிகா அரசாங்கத்தினால்

# தமிழீழ மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வினை வழங்க முடியுமா?

சிறீலங்காவில் இன்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. 17 ஆண்டுகளின் பின் ஆட்சிக்கு வந்துள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சியினாலும், அதன் புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவினாலும் தமிழீழ மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையும் வெளிப்படுத்தப்படுகின்றது. எம்மவரில் சிலரும், புதிய அரசாங்கம் ஒரு நல்ல தீர்வினை வழங்காதா என்ற எதிர்பார்ப்பினைக் கொண்டவர்களாக இருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது.

உண்மையில், சிறீலங்காவின் அரசியல் சூழ்நிலையில், எந்த ஒரு சிங்களத் தலைவராலும், தமிழீழ மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தினை முன் வைக்க முடியுமா? இது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய ஒரு கேள்வியாகும்.

சிறீலங்காவில், சிங்கள பௌத்த இனவாதம், ஆழமாக வேரோடி வளர்ந்துள்ளது. இந்த சிங்கள பௌத்த இனவாதம், இலங்கைத் தீவு சிங்களவர்களுக்கே உரிய ஒன்று எனவும், அவர்களே இலங்கைத் தீவின் மைந்தர்கள் என்றும் ஒரு ஐதீகத்தினை சகல மட்டங்களிலும் பரப்பியுள்ளது. சிறீலங்காவின் அரசியலமைப்புச் சட்டமும் இந்த ஐதீகத்திற்கு உட்பட்டதாகவே அமைக்கப்பட்டுள்ளது. இவ் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில், சிறீலங்காவின் ஆட்சிமுறை ஒற்றையாட்சி அமைப்புக்கு உட்பட்டதாக இருக்கின்றது. சட்டம் இயற்றும் அதிகாரம், பௌத்த சிங்களவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட, பாராளுமன்றம் தவிர்ந்த வேறு உப அமைப்புக்களிடம் கையளிக்கப்பட முடியாது எனத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக எந்த நடவடிக்கையினையும், எந்த ஒரு சிங்களத் தலைவராலும் மேற்கொள்ள முடியாது. எவராவது, அரசியலமைப்புச் சட்டத்தினை மீறுவதாக, சிறீலங்காவின் எந்த ஒரு குடிமகனும் நினைக்கும் பட்சத்தில், அதற்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். உயர் நீதிமன்றமும், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆளுமைக்கு உட்பட்டிருப்பதனால், அரசியலமைப்புக்கு முரணான நடவடிக்கைகளைத் தடை செய்யும் அதிகாரத்தினைக் கொண்டிருக்கின்றது. இத்தகைய ஒரு சூழ்நிலைக்குள் நின்று இயங்கும் சந்திரிகா அரசே, இன்று பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வதாகக் கூறிச் செயற்படுகின்றது.

"தமிழீழ மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை சிறீலங்கா அரசாங்கம் முன்வைக்கும்பட்சத்தில் அதனைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம்; நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கின்றோம்" என விடுதலைப் புலிகள் நீண்டநாட்களாகவே அறிவித்து வந்திருக்கின்றனர். 1991 ஆண்டு தைமாதம், நிபந்தனையற்ற ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தினை அறிவித்து, தமது நிலைப்பாட்டினை நடைமுறையிலும் நிருபித்திருந்தனர். இருந்தும், பழைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இதனை அலட்சியப்படுத்தியது. பிரச்சினைக்குத் தீர்வுகாண இராணுவ வழிமுறைகளை நாடியது. விடுதலைப் புலிகளிடம் உரிய பதிலடிகளைப் பெற்றுத் தன்னைப் பலவீனப்படுத்திக் கொண்டது. தேர்தலிலும் தோல்வி கண்டது. இன்று, புதிய அரசாங்கம், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது. இந்நிலையில், பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழலை ஏற்படுத்துவதற்கு -பொதுமக்கள் மீதான பொருளாதாரத்தடையினை நீக்கல், யுத்த நிறுத்தத்தினை ஏற்படுத்தல், தரை வழிப் போக்குவரத்துப் பாதையினைத் திறத்தல் போன்ற விடயங்கள் அவசியமானவை என்பது, தமிழீழத் தேசியத் தலைவர் திரு.-வே. பிரபாகரன் அவர்களால் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இப் பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழலை ஏற்படுத்துவதில் கூட, புதிய சிறீலங்கா அரசாங்கம் பல இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றது. சிங்கள பேரினவாதிகளின் சீற்றம், பாரிய சக்தியாக வளர்ந்துள்ள இராணுவத்தினரின் அழுத்தம், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாய்ப்பு போன்ற காரணிகள் சிறீலங்கா அரசாங்கத்தின் கவனத்திற்குரியனவாகவே உள்ளன. இச்சந்தர்ப்பத்தில், பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலைகளை ஏற்படுத்துவதில், சந்திரிகா அரசாங்கம் பூரண வெற்றி ஈட்டுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

சரி, பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழலை சிறீலங்கா அரசு ஏற்படுத்துகிறது என வைத்துக் கொள்வோம். சிறீலங்காவின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக ஒருவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெறுகின்றது எனவும் வைத்துக் கொள்வோம். அதில் சந்திரிகா குமாரணதுங்கா, ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுகிறார் எனவும் வைத்துக் கொள்வோம். சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது எனவும் வைத்துக்கொள்வோம். உண்மையில் இவை நடக்கிறதோ! இல்லையோ! தமிழீழ மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வினை, சந்திரிகா அரசாங்கத்தால் முன்வைக்க முடியுமா? என்பதனை நோக்குவதற்காக இவற்றை எடுகோள்களாகக் கொள்வோம்.

இந்த இடத்தில் தமிழீழ மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வு என்பது என்ன? என்பதனை நோக்க வேண்டும். இவ்விடயத்தில், தமிழீழம் தவிர்ந்த ஒரு தீர்வு என்பதனை எடுகோளாக வைத்துக்கொண்டாலும் கூட, அத் தீர்வு எத்தகையதாக இருக்க முடியும்? நாம், 'தமிழீழ மக்களின் நலன்' என்ற நோக்கு நிலையில் இருந்து இதனைப் பார்ப்போம்.

எந்த ஒரு தீர்வுத் திட்டமும் தமிழீழ மக்களை, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்று ஏற்றுக் கொள்ளவேண்டும். இலங்கைத் தீவின் வட -கிழக்குப் பிரதேசங்கள் தமிழீழ மக்களின் பாரம்பரியத் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். இவற்றை அங்கீகரிக்கக் கூடிய எந்த ஒரு தீர்வுத் திட்டத்தினையும், சந்திரிகாவினாலோ அல்லது எந்த ஒரு சிங்களத் தலைவராலோ முன்வைக்க முடியுமா?

இன்னும் ஒரு படி செல்வோம். நடைமுறையில் தீர்வு என்பதற்கான வழி முறைகள் எப்படி அமைய முடியும்? அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒற்றையாட்சி அரசியல்மைப்பு முறைக்குப் பதிலாக, பூரண அதிகாரங்களைக் கொண்ட கூட்டாட்சி முறை



அமுலுக்கு வரவேண்டும். தமிழீழ மக்களின் பாரம்பரியத் தாயகம் மீதான பூரண உரிமை தமிழீழ மக்களுக்கு இருக்க வேண்டும். தமிழீழ மக்களின் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு பேணும் நிர்வாக முறை தமிழீழ மக்களின் கைகளில் இருக்க வேண்டும். தமிழீழ மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார மற்றும் வாழ்வின் சகல அம்சங்களையும் வளம் படுத்தும் அதிகாரங்கள் தமிழீழ மக்களிடம் இருக்க வேண்டும். இவற்றிற்காக சட்டம் இயற்றி, நடைமுறைப் படுத்தும் அதிகாரம் தமிழீழ மக்களிடம் இருக்க வேண்டும். குறைந்த பட்சம், இவற்றினை உள்ளடக்காத எந்தத் தீர்வும் தமிழீழ மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வாக அமைய முடியாது.

இத்தகைய ஒரு தீர்வினைச் சிங்களத் தலைவர் எவராலும் வழங்க முடியுமா? இத்தகைய ஒரு தீர்வுக்குரிய மாற்றங்களை, சிறீலங்காவின் அரசியலமைப்பில் மேற்கொள்ள எந்த சிங்களத் தலைவராலும் முடியுமா? அவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்த, இலங்கைத் தீவில் பூரண உரிமை கோரும் சிங்கள பௌத்த பேரினவாதம் அனுமதிக்குமா? சிங்கள பௌத்த இனவாதத்தினுள் ஊறி நிற்கும் அரச அமைப்புக்களும், ஏனைய அழுத்தக் குழுக்களும் இதனை ஏற்றுக் கொள்ளுமா? சிங்கள பௌத்த இனவாதம் என்ற அத்திவாரத்தில் கட்டி எழுப்பப்பட்டுள்ள, அரச அமைப்புக்குள் நின்று செயற்படும் எந்த ஒரு சிங்களத் தலைவராலும், தமிழீழ மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வினை வழங்குவது என்பது கடினமான செயலே. சந்திரிகாவும் இதற்கு விதி விலக்கு அல்ல.

இவ்வாறான நிலைமைகளை விடுதலைப் புலிகள் புரிந்து கொள்ள வில்லையா? நிச்சயமாக அப்படி இருக்க முடியாது. அப்படியாயின், ஏன் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கின்றனர்? தமிழீழ மக்களின் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு முயலும் எந்த ஒரு சிங்களத் தலைவருக்கும் உரிய சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும். பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமெனில், அதனை முயன்று பார்க்க உறுதியாக உள்ளனர்.

தமிழீழ மக்களின் வேதனைகளையும் இழப்புக்களையும் நீக்க, சகல வழிகளிலும் முயன்று பார்க்க வேண்டும் என்பதில் தெளிவாகவும் உள்ளனர்.

ஆனால், பேச்சுவார்த்தை என்பதன் ஊடாக, தமிழீழ மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யமாட்டாத, ஒரு அரை குறைத் தீர்வுத்திட்டம் முன் வைக்கப்படுமானால், அதனை ஏற்றுக் கொள்ளல் என்பது சாத்தியம் இல்லாததே.

நாம் நிலைமைகளை மிகவும் உற்றுக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். விடுதலைப் புலிகள் பலத்தின் அடிப்படையில் பேசினால் தான் நல்ல விளைவுகள் கிடைக்குமென்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். எமது தேசிய விடுதலை இயக்கத்திற்கு நாம் தொடர்ந்து எமது பூரண ஆதரவை வழங்க வேண்டும். அதற்காக எம்மால் செய்யக் கூடிய அனைத்துப் பங்களிப்புக்களையும் செய்யவேண்டும். அப்போதுதான் -உரிய ஒரு தீர்வுத் திட்டத்தினை வழங்காது, வேறு ஏதாவது போலிக் காரணங்களை முன் வைத்து இராணுவ ரீதியில் போராட்டத்தினை முறியடிக்க நடவடிக்கைகள் ஏதும் சிறீலங்கா அரசால் மேற்கொள்ளப்படின் -அதனை எதிர் கொள்ளக் கூடிய நிலையில் எமது தாயகம் இருக்கும். ■

## பாடசாலை மட்டத்திலான...

### சிவனேசன்..

இவரே முதன்மை பெற்றவராகக் காணப்படுகின்றார். அடுத்த வருடமும் 17 வயதிற்குட்பட்ட பிரிவிலேயே ஆடத் தகுதியான இவர், 17 வயதுப் பிரிவின் கன்னி அறிமுகத்திலேயே சதம் போட்டிருப்பது பாராட்டிற்குரியது. ஓட்டங்கள் சேகரிப்பதில் மிக நிதானம் காட்டும் இவர் பந்து வீச்சாளர்களை மிக அவதானமாகக் கையாள்பவர். இம் முறை நடைபெறும் சுற்றுப் போட்டியில் சில சிறந்த பந்துவீச்சாளர்களைச் சந்தித்ததாகக் கூறும் இவர், தன்னை சிறிது தடுமாற வைத்த பந்துவீச்சாளர் கொக்குவில் இந்துக் கல்லூரி வேகப்பந்து வீச்சாளர் ப. சசிகரன் மட்டும்தான் என்கிறார்.

இவரைப் பற்றிக் கருத்துக் கூறுகையில், "இவர் பயிற்சிக்கு மிக ஒழுங்காக வருபவர். அதோடு பயிற்சியின் போது, அதில் தனது முழுக் கவனத்தையும் தீவிரமாகச் செலுத்துபவர்" என்கிறார் இவரது பயிற்றுநர். முதன் முறையாக விக்கெட் காப்பாளராகக் கடமையாற்றும் இவர், அதன் நுட்பங்களைக் கற்றுக் கொண்டு வேகமாக முன்னேறி வருகின்றார். நாற்பதுகளைக் கடக்கும் போதோ, அல்லது சதத்தை அண்மிக்கும் போதோ இவர் எவ்வித பதற்றத்தையும் காட்டாமை எதிர்காலத்தில் இவரின் துடுப்பாட்டத் திறமை இன்னும் அதிகரிக்கும் என்பதையே காட்டுகிறது என்பது பயிற்றுநரின் கருத்து.

### வி. எஸ். நிர்மலானந்தன்..

3க்கு உரியது, இதனை மிகத்திறம்படச் செய்பவர் இவர் என்கிறார் இவரின் பயிற்றுநர். இவர் தனது சதத்தை தன் கல்லூரி மைதானத்திலேயே பெற்றுக்கொண்டார். தன் கிரிக்கெட் வாழ்க்கையில் பெற்ற முதலாவது சதம் இது என்ற வகையில் என்றும், இனிய நினைவாக இது இருக்கும் என்கிறார். ஆட்டத்திற்கு ஆட்டம் தன் விக்கெட் காப்புப்பணியில் முன்னேற்றம் காண்பதாகக் கூறும் இவர், எவ்வகைப் பந்து வீச்சையும் மைதானத்தின் எத்திசையிலும் அடித்தாடும் திறமை பெற்றவர். இதுவரை தான் சந்தித்த பந்து வீச்சாளர்களில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பந்துவீச்சாளர் மதுசூதனன், தன்னைச் சிறிது அசைவுறச்செய்து விட்டார் என்கிறார். இவரது சதம் பற்றி இவரின் பயிற்றுநர் கருத்துக்கூறுகையில், "40களின் பிற்பகுதியில் அல்லது சதத்தை அண்மிக்கும் போதோ எவ்வித சலனமும் காட்டாமல் தன்நம்பிக்கையுடன் விளையாடினார். இவரது சதம் திறமையான தொன்று. அதோடு ஆர்வத்துடன் பயிற்சி பெறுவது இவரது இயல்பு" என்கிறார். ■

### தமிழீழ...

சுமார் 50,000 மக்கள் குடியமர்த்தப்பட்டால், அவர்களின் குடி நீர்த்தேவை நாளாந்தம் 250,000 கலனாக அதிகரிக்கும். ஆகவே, சுமார் 475,000 கலன் நீர் நாளாந்தம் தேவைப்படும். இவ்விடத்தில் நிலக்கீழ் நீர் கிடைப்பது, அரிது என்று முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நீரைப் பெறுவதற்கு கனகராயன் குளம் அல்லது வவுனிக்குளத்திலுள்ள மேற்பரப்பு நீரை சுத்திகரிப்பின், பின் உபயோகிக்கலாம். எனினும் இதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(தொடரும்...)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறு கதை

ந.கிருஷ்ணசிங்கம்

# நிமிர்வு

ஊரடங்கு உத்தரவு விலக்கப்பட்டதால், செங்கலடி பிரதேசம் வழமை நிலைமைக்கு வந்துகொண்டிருந்தது. தொடர் துட்டுச்சத்தங்களும், செல் சென்று சிதறும் ஒலிகளும், விமானம் வீசும் குண்டொலிகளும் இராணுவத் தொடர் ஊர்திகளின் தெரு இரைச்சல்களும் ஓய்ந்து, மையங்கொண்டிருந்த மாபயம் சற்று மறைந்தது. இருள் திரையைக் கிழித்து ஆங்காங்கே வீட்டு விளக்குகள் விழிதிறந்து பார்த்தன.

பிள்ளைகளின் பாடு என்ன? தந்தையின் நிலை என்ன? சகோதரங்களின் கதி என்ன? என்று... உறவு சொல்லி, ஊதி வெளிவந்த பெருமூச்சுக்களோடு, பேதலித்துக் கிடந்தவர்கள்... இடிந்தும் -தீயில் எரிந்தும்..... அழிந்துபோன வீடுகளைத் துறந்து ஏதிலிகளாகத் தங்கங்களைத் தேடி வந்தவர்கள், அனைத்துத் தரப்பினரும், விடியல் ஒன்றை வேண்டித் தவம்கிடந்தனர்.

பசியால் பேச்சை இழந்து, ஒட்டிய வயிற்றுக் குகையைச் சுமந்தபடி பாய்களில், வெறும் தரையில் சுருண்டு கிடந்தவர்கள்; காலை விடியல் கண்டு கண்திறந்து பார்த்தனர். மெல்ல மேனிகளை மேலெழுப்பி, நடுங்கியபடி, நெஞ்சை நிமிர்த்தி நாரியைக் கைகளால் பிடித்தபடி வீட்டுப்படலைகளின் இறுக்கமான கட்டுக்களை அவிழ்த்து, வீதிக்கு வெளிப்பட்டு, விழியுயர்த்தி, அச்சங் கலந்த பார்வையை அகல வீசினர்.

கடைத்தெருவில் மனித நடமாட்டம் மெல்லப் பெருகுகின்றது. அரைக்கதவில் சில கடைகள் திறந்து கிடக்க, அவற்றை மனிதத் திரைகள் மறைத்துக் கொள்கின்றன. கொள்ளைவிலை கூறி, குதித்தாடும் தராசுகளை நிறுத்தாது, நிறுத்துக்கொட்டியபடி மும்முரமாய் வியாபாரம் நடத்தும், 'மூனா'க்களுள் முத்துலிங்கமும் ஒருவராகி, மின்கதியில் செயற்படுகின்றார்.

"ஏ! என்னத்துக்கு இப்பிடிக் கத்றா? உயிரா பொயித்து? சில்லறை இல்ல இந்தா பிடி இனிப்பு; ஏ மற்றாள் வாவண்டா! சொல்லித் தொலையண்டா! மறுகா இவன் எங்க கிறுகிறான்? பொயித் தள்ளி நில்! விலை கேட்டாடி வாங்கப்போறா? வேணுமெண்டா வாங்கு! இல்லாட்டி வெட்டைக்குப் போ! என்ன சொல்லித்துப் போறாள்? பல்லு உடைச்சு கையில தருவன் ஓ!...

என்றெல்லாம் ஏறுமாறாய் பேசிய முத்துலிங்கம் முதலாளி, மும்முரமாய் வியாபாரம் நடத்துகின்றார். காசை எண்ணித்தள்ளி... கேட்ட பொருளை எடுத்தெறிந்து கிராக்கியான நடைமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு.... கேட்பாரற்ற தனிக்காட்டு ராசாவாக, தன்னை அவர் காட்டிக்கொள்கிறார்.

பகற்பொழுது கழிய... இரவு நெருங்கி வந்து சுரண்டியது; இதயத் துடிப்புக்கள் காதுகளில் கேட்டன. எண்ண வெளியில் நினைவுக் கழுகுகள் நிரைநிரையாய்ப் பறந்து வந்து பயங்காட்டின, நெஞ்சக் குமுறலை அடக்க... நெடுமூச்செறிந்து புரண்டு படுத்தவர்கள்; தூரத்தே விழுந்து வெடிக்கும் எறிகணைகளின் அதிர்வு கேட்டு உழன்றனர்.

"செங்கலடிக் கேம்பில் இருந்துதான் ஆமி அடிக்கிறான்கள்?" என்று பூபாலுக்கிழவர் சுருட்டின் புகையை வெளியேதள்ளி... வீணியை தூரத் துப்புகின்றார்! சிறிய அந்த அறையில் படுத்துக்கிடந்த மனைவி சின்னம்மாவையும்... மகள் சுந்தரியையும் எட்டிப்பார்த்துவிட்டு, யன்னலண்டை சற்றுத் தாமதித்து; நெடுமூச்சை இறைத்தவராக தனது குந்துப்பாயில் வந்து குந்துகிறார் கிழவர்.



முற்றத்தில் கிடந்த குட்டைநாயின் குலையல் சப்தத்தை அடுத்து, ஆளரவம் கேட்கவே... அதிர்ந்த குரலில் "ஆர்... ஆர்... அது?" என்ற பூபாலரின் கேள்விக்கு, "அது நான்! சோமு!" என்ற பதில் அங்கு பிறக்கின்றது.

குப்பி விளக்கைக் கொழுத்திப் பிடித்தவர், மருமகன் சோமனை அடையாளம் கண்டு ஆனந்தப்பட: இந்த அமளியில் சின்னம்மாவும் சுந்தரியும் எழுந்துகொள்கின்றார்கள். பயமயக்கம் தெளிந்து, வீடு வீரமாய் நிமிர்கின்றது!

கணவனின் வரவுகண்டு களிப்போடு, சுந்தரி அவனருகில் வந்து நிற்கின்றாள். பாளை பிளந்தது போன்ற பல்வரிசைச் சிரிப்பு, குப்பி விளக்கொளியிலும் தெளிவாகத் தெரிந்தது: என்னப்பா; எங்கால வந்தியள்?... கொள்ளை விழுந்த ஆமியள். என்நேரமும் சிறுசிறுத்திருக்காங்கள்!... சித்தாண்டி முருகன் தான் இந்த நேரத்திலை காப்பாத்தி விட்டிருக்கார்!" என்றவள், கணவன் கொண்டுவந்த கைப்பையைப் பெற்றுச்சென்று, பக்குவமாய் நெல்மூடைகளின் மறைவில் வைக்கிறாள், சுந்தரி! என்ன நல்லாய் பயந்துபோய் இருக்காய்போல வெலங்குது" என்ற சோமு, இருளின் துணையோடு துணைவியின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டான். அவனின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டவள், குப்பி விளக்கோடு குசினிப்பக்கமாகச் சென்றாள்.

மறுகணம் தண்ணீர் பிழிந்த பழம் சோற்றை கறிவகைகளோடு பிசைந்து, குழையலாக்கி... தட்டு நிறைய இட்டபடி வந்து, அன்போடு அவன்முன் வைக்கின்றாள். நிசப்தமான அந்த நள்ளிரவில்... குட்டைநாய் வந்து, வாலை ஆட்டி, அனுங்க... உருட்டிய சோற்றின் ஒரு பகுதியை அதற்கும் பகிர்ந்து, தானும் உண்டு அவன் பசியாறி எழுந்தான்! கை, வாய் கழுவி - சாரத்தால் துடைத்து செம்புத்தண்ணீரை செப்பமாகக் குடித்துவிட்டு, "அப்பாடா -" என்று குந்திலே வந்து அமர்ந்துகொண்ட சோமனுக்கு, காதிலே விழும்படியாக -சின்னம்மா கதையைத் தொடங்கினாள்.

"எட! இந்த நாலஞ்சுநாளும் எம்மாத்திரம் பயமுறுத்தாட்டி -மேலாலையும் கீழாலையும் கொண்டந்து பொரிஞ்சலா போட்டானுகள் பிசாசுகள்! சித்தாண்டியானே! படுக்க உடன் -இருக்க உடன் எண்டு, அழிவானுகள் என்னபாடு படுத்தினானுகள்! உசிருகளை உட்டது கள்... ஊனமா போனதுகள் எண்டு -" தொடர் சுருதியில் வெளிவந்த மாமியாரின் பேச்சைக்கேட்டு, சோமன் "உம் -உம் -" இட்டபடி, குசியாகக் காலாட்டிக் கொண்டிருந்தான்.

"மருமகன் நம்மளை பாப்பார் எண்டு, நாமள் நெனச்சித்து இரிக்க, ஆமிக்கிளைக்கை நம்மளை உட்டுட்டு -துணைப்படை -அது இதென்டித்து குண்டுகளையும் தூக்கித்து -வெட்டையிலை நிக்கிறியள் -" என்று பூபாலுக்கிழவர் புறுபுறுத்தார்.

**"மாமியும் மாமாவும் நெனைக்கிற சரிதான். ஆனா... நம்மட பொடியனுகளுக்கு எல்லாரும் ஒத்தாசையாதான் இருக்கோணும்! நான் மட்டுமல்ல; நாம எல்லாரும் குண்டைத் தூக்கிப்பிடிச்சுத்தான் வெட்டையிலை வரோணும்... இல்ல, இந்த மண்ணில தமிழீழம் வரா... ஓ!** சுந்தரி! அந்த வெத்தில வட்டாவ எடுத்துவா!... வாய் புளிக்குது!".

சோமன் கதையை முடிவுக்குக்கொண்டுவந்து, வெற்றிலை போட்டு சப்பிக்குதப்பி -துப்பிவிட்டு, உற்சாகமாய் தனக்குரிய படுக்கையில் துணையோடு துயில்கொண்டான்.

அதிகாலை அமைதியாக விடிந்தது. ஊர்நிலைமை வழமைக்குவந்தது போன்ற பொய்யான தோற்றப்பொலிவுகண்டு, பலரும் வயல்களை நாடி வேளாண்மைவெட்ட வெளிப்பட்டுப் போனார்கள்.

பருவம் தப்பியதால், படுத்துவிட்டு நெற்பயிரை கரங்கள் கொடுத்து நிமிர்த்தி... கரிசனையோடு வெட்டிக் குவித்தார்கள். படபடப்போடு பல திக்கும் பார்த்து... சந்தேகத்தைத் தீர்த்து, தூரத்தில் கேட்கும் துடால் தீங்குகள் வரா என்று துணிந்து... பம்பர விசையுடன் அரிவுவெட்டு ஆங்காங்கு நடைபெற்றன.

ரைக்டர் யந்திரங்கள் எண்ணையற்றுப் படுத்ததால்... மாடுகளால் சூடுமிதித்து... தூற்றி எடுத்த நெல்மணிகளை வயல் முற்றத்தில் குவிக்கும் வேலையும் அன்று முழுவதும் தொடர்ந்தது. எரியுண்டு அழிந்து போன வயல்களைவிட... அனேகமாக எங்கும் மனிதத்தலைகள் தென்பட்டன.

பூபாலுக் கிழவரும், சின்னம்மாவும் வயலில் தங்கி, முழுநாளும் நின்றார்கள். சோமன் ஏதோ அவசர வேலையாய் வெளியே சென்றுவிட, சுந்தரி மட்டும் வீட்டில் தங்கி இருந்தாள்.

முற்றத்தில் கிடந்த நாய் எழுந்து நின்று, ஆவேசமாய் குரைத்து; அங்கு மிங்கும் ஓடவே... அரவம்கேட்டு எட்டிப்பார்த்த சுந்தரி அதிர்ந்தே போனாள்!

கடைக்கார முத்துலிங்கம் முன்னே வந்து வழிகாட்ட; இராணுவமும்... துரோகக்கும்பலும் ஒழுங்கையைத் தாண்டிவந்து வீட்டின் முற்றத்தில் குவிந்துகொள்ளவே, திகில்கொண்டு திணறிய சுந்தரி, முன்விறாந்தை மூலையில் அடுக்கப்பட்டிருந்த நெல்லு மூடைகளின் பின்சென்று, ஒதுங்கி உருமறைப்புச் செய்துகொண்டாள்.

கொலை வெறிகொண்ட கூட்டத்தினால், தான் குதறப்படப்போவதை எண்ணி, பதைபதைத்தவளின் உடல் நடுங்கி வேர்த்தது! மறுகணம் துணிவுகொண்டு பெண்புலியாக அவள் செயற்பட்டாள்.

அங்கு கிடந்தபையினுள் கைவிட்டு... குண்டொன்றை எடுத்துக்கொண்டவள், மின்னல்வேகத்தில் அதைச் செயற்படுத்தி... முற்றத்தை நோக்கி வீசினாள். மறுபடி

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



# தமிழீழ உட்கட்டுமானம்

## நீர் வழங்கலும் வடிகாலும் பகுதி II

சென்ற இதழ் தொடர்ச்சி

### 3. தமிழீழத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது பட்டினங்களின் நன்னீர்த் தேவைகளும் சிபார்சுகளும்.

தமிழீழம் வரட்சி வலயத்தில் அமைந்துள்ளதால், சாதாரண பொதுமக்களுக்கு குடிநீர் நாளொன்றிற்கு ஒருவருக்கு ஐந்து கலன் மட்டுமே வழங்கப்படும். மற்றும் வைத்தியசாலைகள், காரியாலயங்கள், விடுதிகள் ஆகியவற்றிற்கு முழு அளவில் நீர் வழங்கப்படும். மற்றும் கைத்தொழில் பேட்டைகளில், தொழிற்சாலைகளில் வேலை செய்வோருக்கு குடிநீர் மட்டுமே (நாளொன்றிற்கு ஒருவருக்கு ஒரு கலன்) வழங்கப்படும்.

பாரிய நீரில் தங்கியிருக்கும் தொழிற்சாலைகள் இன்னும் எவையென்று இனம் காணாததால், இவ்வறிக்கையில் அவர்களின் நீர்த்தேவைகள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

பாரிய உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும், நீரின் கோட்பாடுகளும் குடிநீரின் கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. குடிநீருக்கு வேண்டிய சுத்திகரிப்பு வேலைகள் தொழிற்சாலையில் பாவிக்கப்படும் நீருக்குத் தேவையில்லை. ஆகவே, தொழிற்சாலையினது நீர்த்தேவை இரண்டாம் கட்டமாக ஆராயப்படும்.

இருபது நகரங்களும் ஆராயப்பட்டு, அவற்றின் குடிநீர்த் தேவைகள் பின்வருமாறு:

#### 3.1 நல்லூர்

நல்லூர் பிரதேசத்தின் பட்டினமாக யாழ்ப்பாணம் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது. இது கூடிய சனத்தொகைகொண்ட ஒரு நிலப்பரப்பு. ஏறக்குறைய மூன்று இலட்சம் மக்கள் இப்பிரதேசத்தில் வாழ்கின்றார்கள். இங்கு நீர்வளம் நிலத்தின் கீழ் உள்ள நீர் மட்டுமே. இந்நீர் கூடிய உவர்த்தன்மை உடையதாக இருக்கின்றது. ஏற்கனவே இப்பகுதியில் பதினைந்து நீர் விநியோகத் திட்டங்கள் இருக்கின்றன. இவை ஏறக்குறைய 75,000 மக்களுக்கு குடிநீர் வசதி அளிக்கின்றது. இத்திட்டங்கள் யாழ். மாநகர சபை, நீர் வழங்கல் சபை, உள்ளூராட்சி மன்றம் முதலியவற்றினால் செயற்படுத்தப்படுகின்றது.

இவ்விநியோகத்தின் பெரும்பகுதி யாழ். மாநகர சபையால் திருநெல்வேலி, கோண்டாவில் முதலிய இடங்களில் அமைந்துள்ள கிணறுகளில் இருந்து செயற்படுத்தப்படுகின்றது. இவ்விரண்டு கிணறுகளும் அதன் முழுக் கொள் அளவையும் பயன்படுத்துவதால், மேலும் விஸ்தரிக்க முடியாது. தற்பொழுது மேலதிகமாக நாளாந்தம் 100,000 கலன் நீரை நிலாவரையிலிருந்து எடுப்பதற்கான ஒரு திட்டம் உண்டு. யாழ். நகரத்தில் உட்படுத்தப்படும் அமைப்புக்களையும் அவற்றிற்குத் தேவையான குடிநீரின் அளவையும் கீழ்வரும் தரவுகள் தெரிவிக்கின்றன.

| | தொகை | தேவையான நீர் நாளாந்தம் கலன் |
|---|---|---|
| 1. பிரதேசச் செயலகம் | 1 | 10,000 |
| 2. வேறு காரியாலயங்கள் | 50 | 20,000 |
| 3. போதனா வைத்தியசாலை (ஆயிரம் படுக்கைகள்) | 1 | 100,000 |
| 4. தனியார் வைத்தியசாலைகளும் மருந்தகங்களும் | 20 | 50,000 |
| 5. பாடசாலைகள் | 20 | 50,000 |
| 6. கடைகள் | 300 | 30,000 |
| 7. உணவகம் | 20 | 20,000 |
| 8. உணவு விடுதி | 5 | 50,000 |
| 9. திரை அரங்குகள் | 10 | 10,000 |
| 10. கைத்தொழிற் பேட்டைகள் | 5 | 10,000 |

நாளொன்றுக்கு சுமார் 350,000 கலன் நீர் தேவை. முதற்கட்டமாக நகரப் பகுதியிலுள்ள மக்களுக்கு மட்டும் குடிநீர் விநியோகிக்கலாம். நகரப் பகுதியில் வாழும் மக்களின் தொகை 100,000 ஆக இருந்தால், அவர்களின் குடிநீர்த் தேவை நாளாந்தம் 500,000 ஆகும். இப்பிரதேசத்தில் மேற்குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்ய, போதிய நீர்வளம் இல்லை. இவ்வறிக்கையில் பந்தி 3 (1) இல் காட்டியபடி நீர்வளத்தை விருத்தி செய்து, பருத்தித்துறை நீர்வளத்திலிருந்து குடிநீரைப் பெற்றுக்கொள்ளலாம்.

#### 3.2 வரணி

இப்பிரதேசத்தில் பிரதான நகரமாக கொடிகாமம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இப்பிரதேசம் பருத்தித்துறை, சாவகச்சேரி பட்டினங்களை உள்ளடக்கும். இப்பிரதேசத்தில், சனத்தொகை ஏறக்குறைய 200,000 ஆகும். இப்பிரதேசத்தில் கரவெட்டி, கன்பொல்லை, வல்வெட்டித்துறை முதலிய இடங்களில் நீர் விநியோகத் திட்டங்கள் இருக்கின்றன. சுமார் 20,000 மக்களுக்கு குடிநீர் வசதி அளிக்கின்றது.

மேலும் பருத்தித்துறை, சாவகச்சேரி நகரப்பகுதிகளில் இரண்டு நீர் விநியோகத் திட்டங்கள் திட்டமிடப்பட்டு, 60 வீதம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ்விரு திட்டங்களிலிருந்தும் 450,000 கலன் நீர் விநியோகிக்கலாம். தற்பொழுது கொடிகாமம் பகுதியில், குடிநீருக்கு அவ்வளவு தட்டுப்பாடு இல்லை. கொடிகாமம் நகரத் தொடர்புகள் ஸ்தாபிக்கப்படாமல் கீழ்வரும் குடிநீர்த் தேவைகள் உண்டாகும்.

| | தொகை | தேவையான நீர் நாளாந்தம் கலன் |
|---|---|---|
| 1. பிரதேச செயலகம் | 1 | 5,000 |
| 2. ஏனைய காரியாலயங்களும் ஊழியர் விடுதிகளும் | 75 | 35,000 |
| 3. ஆதார வைத்தியசாலை | 1 | 50,000 |
| 4. தனியார் வைத்தியசாலையும் மருந்தகமும் | 10 | 20,000 |
| 5. பாடசாலைகள் | 1C | 20,000 |
| 6. வியாபார நிலையங்கள் | 100 | 10,000 |
| 7. உணவகங்கள் | 10 | 10,000 |
| 8. உணவு விடுதிகள் | 2 | 20,000 |
| 9. திரை அரங்குகள் | 5 | 5,000 |
| 10. தொழிற்பேட்டைகள் | 5 | 10,000 |

சுமார் 200,000 கலன் நீர் நாளாந்தம் தேவை. நகரவாழ் மக்களின் எண்ணிக்கை 50,000 என அதிகரிக்கும் பட்சத்தில், இவர்களின் குடிநீர்த்தேவை நாளாந்தம் 250,0-00 கலன் ஆகும். கொடிகாமம் நகரின் முழுத்தேவை 450,000 கலன் ஆகும். இந்நீரை பருத்தித்துறையில் கண்டுபிடிக்கப்பட்ட நிலக்கீழ் நீர் தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். மேலும் சாவகச்சேரி நீர் விநியோகத்திட்ட பிரதான குழாய் கொடிகாமம் நகர் பகுதியினூடாகச் செல்வதால், இத்திட்டத்தை மேலும் விஸ்தரித்தும், கொடிகாமம் நகரின் நீர்த்தேவையைப் பூர்த்திசெய்யலாம்.

**எமது தேசிய விடுதலைப் போராட்டம் அளப்பெரும் தியாகங்களின் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்படும் அதேவேளை, ஒரு தனியாசிறகான பண்புகளுடன், மலர்ந்துவரும் தமிழீழத்தின் சமூக, பொருண்மிய, அரசியல் தேவைகளுக்கேற்ப, அதன் எதிர்கால உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இதற்கென யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 8 குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவற்றினால் வழங்கப்படும் ஆலோசனைகள் தீர்மானங்களுக்கேற்ப, செயற்திறன் உடைய பெருந்திட்டம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பெருந் திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக, வடிவமைக்கப்பட்ட தமிழீழ உட்கட்டுமான அமைப்பின், முக்கியமான அம்சங்களே இங்கு வெளியிடப்பட்டுள்ளன.**

#### 3.3 கரைச்சி

இப்பிரதேசத்தின் பிரதான நகரம் கிளிநொச்சி ஆகும். தற்பொழுதும் இதுவே நகரமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் பொறியியல்பீடம், விவசாயபீடம், மீன்பிடித்தலும் கடல்வளமும் சம்பந்தமானபீடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பொழுது கிளிநொச்சியிலுள்ள சாதாரண மக்கள் குடிநீருக்கு அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. கிளிநொச்சிநகர் விருத்தி செய்யப்பட்டபின், பின்வரும் நீர்த்தேவைகள் உண்டாகும்.

| | தொகை | தேவையான நீர் நாளாந்தம் கலன் |
|---|---|---|
| 1. பிரதேச செயலகம் | 1 | 5,000 |
| 2. ஏனைய காரியாலயங்களும் விடுதிகளும் | 100 | 50,000 |
| 3. ஆதார வைத்தியசாலை | 1 | 50,000 |
| 4. தனியார் வைத்தியசாலைகளும் மருந்தகமும் | 10 | 10,000 |
| 5. பாடசாலைகள் | 5 | 50,000 |
| 6. வியாபார நிலையங்கள் | 200 | 20,000 |
| 7. உணவகங்கள் | 2 | 10,000 |
| 8. உணவு விடுதிகள் | 5 | 30,000 |
| 9. திரையரங்குகள் | 5 | 5,000 |
| 10. கைத்தொழில் பேட்டைகள் | 10 | 20,000 |

விவசாயபீடத்திற்கு நாளாந்தம் 10,000 கலனும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கு 25,000 கலனும் விநியோகிக்கப்படுவதற்கு ஏற்கனவே இணக்கம் காணப்பட்டது. கிளிநொச்சிப் பட்டினத்திற்கு அபிவிருத்தியால் சனத்தொகை 20,000 ஆக அதிகரிக்கும்போது, நாளாந்தம் 100,000 கலன் ஆகும். ஆகவே, கிளிநாச்சி நகரின் முழுக் குடிநீர்த்தேவை 425,000 கலன் நீராகும். ஏற்கனவே தேசிய நீர்வழங்கல் சபை நாளாந்தம் 450,000 கலன் நீர்வழங்கல் பற்றிய திட்டம் ஒன்றை நிர்மாணித்திருக்கின்றது. ஆகவே இத்திட்டம் நகரத்தொடர்பு நீர்த்தேவையைப் பூர்த்திசெய்யும். எப்படியாயினும் பொறியியல்பீடமும், கடல்வளம் சம்பந்தமானபீடமும் தங்களுடைய நீர்த்தேவையைத் தாமே பூர்த்திசெய்யவேண்டும். இப்பீடங்கள் தமக்குத் தேவையான நீரைக் குழாய்க்கிணறுகள் நிர்மாணித்து, நிலக்கீழ் நீராகப் பெற்றுக்கொள்ளலாம். கிளிநொச்சியில் பாரிய தொழிற்சாலைகள் அமைக்கத் திட்டமிட்டிருப்பதால், இவற்றுக்குத் தேவையான நீரை இரண்டாம் கட்டமாக விநியோகிக்கலாம். ஆனால், இவற்றிற்குத் தேவையான நீரைப் பெறுவதற்கு ஆய்வுகள் நடாத்தப்பட வேண்டும்.

#### 3.4 பூநகரி

பூநகரி நகரத்தொடர்பு கிளிநொச்சிபோன்று பெரிதாக இருக்கமாட்டாது. இப்பிரதேசம் விவசாயமும், கடற்றொழிலும் உடையபகுதியாக விளங்கும். இது பிரயாணிகள் போக்குவரத்து மையமாகவும் பாவிக்கப்படும். இந்நகர் அபிவிருத்திசெய்யப்பட்டபின், பின்வரும் நீர்த் தேவைகள் உண்டாகும்.

| | தொகை | தேவையான நீர் நாளாந்தம் கலன் |
|---|---|---|
| 1. பிரதேசக் காரியாலயம் | 1 | 4,000 |
| 2. ஏனைய காரியாலயங்களும் ஊழியர் விடுதிகளும் | 30 | 10,000 |
| 3. வைத்தியசாலை | 1 | 12,000 |
| 4. தனியார் வைத்தியசாலையும் மருந்தகமும் | 3 | 3,000 |
| 5. பாடசாலைகள் | 3 | 3,000 |
| 6. வியாபார நிலையங்கள் | 6 | 5,000 |
| 7. உணவகங்கள் | 10 | 5,000 |
| 8. திரையரங்குகள் | 3 | 2,000 |
| 9. கைத்தொழிற்பேட்டைகள் | 5 | 5,000 |
| 10. பயணிகள் தொடர்பகங்கள் | 1 | 3,000 |

பட்டினத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கை 5,000 எனக்கொண்டால், அவர்களுக்கு நாளாந்தம் 25,000 கலன் குடிநீர் தேவை. ஆகவே மொத்தமாக நாளாந்தம் 75,000 கலன் நீர் தேவை.

பூநகரிப் பகுதி கடலால் சூழப்பட்டுள்ளதால், நீர் உவர்த்தன்மையாக இருக்கின்றது. மழைநீர் சுலபமாகக் கடலுக்குள் வடிகின்றது. இப்பிரதேசத்தில் ஒரு நீர் விநியோகத்திட்டம் அமைப்பது கடினம் என்றாலும், ஆழமில்லாத கூட்டமான கிணறுகளை அமைத்து, மேற்கூறிய நீரைப்பெற்றுக்கொள்ளலாம். எனினும், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

#### 3.5 முல்லைத்தீவு

இப்பிரதேசத்தின் பிரதான நகரமாகத் தண்ணீரூற்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தற்போது தண்ணீரூற்றின் சனத்தொகை 10,000 ஆகும். ஆனால், இந்நகர் விஸ்தரிக்கப்பட்ட பின்னர், சனத்தொகை 30,000 ஆக அதிகரிக்கலாம். அப்பொழுது பின்வரும் குடிநீர்த்தேவைகள் உண்டாகும்.

| | தொகை | தேவையான நீர் நாளாந்தம் கலன் |
|---|---|---|
| 1. பிரதேசச் செயலகம் | 1 | 5,000 |
| 2. ஏனைய காரியாலயங்களும் ஊழியர் விடுதிகளும் | 60 | 30,000 |
| 3. தனியார் வைத்தியசாலைகளும் மருந்தகங்களும் | 5 | 5,000 |
| 4. ஆதார வைத்தியசாலை | 1 | 20,000 |
| 5. பாடசாலைகள் | 5 | 5,000 |
| 6. வியாபார நிலையங்கள் | 50 | 5,000 |
| 7. உணவகங்களும் உணவுவிடுதிகளும் | 5 | 10,000 |
| 8. திரையரங்குகள் | 3 | 20,000 |
| 9. தொழிற்பேட்டைகள் | 10 | 15,000 |

ஏறக்குறைய 100,000 கலனாகும், தண்ணீரூற்றில் வாழும் சாதாரண மக்களின் தேவை நாளாந்தம் 150,000 கலனாகும். ஆகவே, முழுநீர்த்தேவை நாளாந்தம் 250,000 கலனாகும். தேசிய நீர்ச்சபை நடாத்திய ஆய்வின்படி, நாளாந்தம் சுமார் 100,000 கலன் நீர் தண்ணீரூற்றில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். மிகுதியான நீரைப் பெறுவதற்கு மேலும் ஆய்வுகள் நடாத்தப்பட வேண்டும். இப்பொழுது இருக்கும் முல்லைத்தீவு நகரிலும் குடிநீருக்கு மிகவும் தட்டுப்பாடாக இருக்கின்றது. இவர்களின் தேவைகள் இரண்டாம் கட்டமாக ஆராயப்படலாம்.

#### 3.6 மாங்குளம்

வடக்கின் மத்திய நிர்வாக மையமாக மாங்குளம் விளங்கும். அதிகமான காரியாலயங்கள், ஊழியர் விடுதிகள், வர்த்தக ஸ்தாபனங்கள், உணவு விடுதிகள் முதலியவற்றை அபிவிருத்திக்குப் பின், இங்கு காணக்கூடியதாக இருக்கும். பின்வரும் குடிநீர்ப் தேவைகள் மாங்குளம் நகரத்தில் எதிர்பார்க்கலாம்.

| | தொகை | தேவையான நீர் நாளாந்தம் கலன் |
|---|---|---|
| 1. செயலகம் | 1 | 10,000 |
| 2. காரியாலயங்களும் ஊழியர் விடுதிகளும் | 200 | 100,000 |
| 3. ஆதார வைத்தியசாலை | 1 | 30,000 |
| 4. தனியார் வைத்தியசாலையும் மருந்தகங்களும் | 5 | 5,000 |
| 5. பாடசாலைகள் | 5 | 15,000 |
| 6. வியாபார நிலையங்கள் | 100 | 10,000 |
| 7. உணவுவிடுதிகள் | 3 | 20,000 |
| 8. உணவகம் | 10 | 10,000 |
| 9. திரையரங்குகள் | 5 | 3,000 |
| 10. தொழிற்பேட்டைகள் | 10 | 20,000 |

இப்பகுதியில் குடியேற்றமிடத் திட்டமிடப்பட்டுள்ளதால், அவர்களின் நீர்த்தேவையும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் போட்டி துடுப்பாட்டத்தில் இன்றைய நாயகர்கள்

*"இன்று யாழ்ப்பாணத்தில் பல்துறை விளையாட்டுகளிலும் இள வயதுகளின் இணைவு மிக அதிகமாகும். அண்மையில் நடைபெற்ற 15, 17 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இவ்வகையில் குறிப்பிடத்தக்கதொன்று. ஆற்றல்கள் வேகமாக வேர் கொள்ளும் இளம் சிறார்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தி இவர்களில் முதன்மை பெற்றுத் திகழ்பவர்கள் சிலர். இவ்வகையில் 15 -17 வயதுக்குட்பட்ட போட்டிகளில் இப் பருவத்தில் சதம் போட்டுச் சாதனை புரிந்துள்ளவர்களைப் பற்றிய சிறப்புக் குறிப்புகளை விளையாட்டு ரசிகர்களுக்கு இங்கு தருகின்றோம். இளம் வீரர்களைச் சந்தித்து உரையாட அனுமதித்த அதிபர்கள், மற்றும் உடனிருந்து உதவிய பயிற்றுநர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்."*




### கா. சசிகரன்



கொக்குவில் இந்துக் கல்லூரி 17 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணியின் தலைவராகத் திகழ்பவர் கா. சசிகரன். இவர் இம்முறை தன்வயதுப் பிரிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிரான போட்டியொன்றில் 172 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 17 வயதுக்குட்பட்ட பிரிவில் இவ்வெண்ணிக்கையே அதிகூடிய எண்ணிக்கை என்றதொரு கருத்தும் நிலவுகின்றது. 01-09 -77 இல் பிறந்த இவர் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் இரண்டாவது வருடமாக ஆடிக்கொண்டிருக்கின்றார். இவரது சாதனைப் பட்டியல் சிறிது நீளமானது. தன் வயதுப் பிரிவில் பெற்ற 172, 10 ஆறுகளையும், 22 நான்குகளையும் கொண்டமைந்திருந்தது. 94 இல் கல்லூரி 19 வயதுக்குட்பட்ட அணியின் முன்னணி வீரர்களுள் ஒருவர். இந்த வகையில் மகாஜனாக் கல்லூரிக்கு எதிராக 133, யாழ். இந்துக் கல்லூரிக்கு எதிராக 72, ஸ்ரான்லிக் கல்லூரிக்கு எதிராக 47 என்றவாறு ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் சகல துறைகளிலும் பிரகாசிக்க ஆரம்பித்துள்ளார். வலது கைத் துடுப்பாட்ட வீரராகிய இவர், அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராவார். ஆரம்ப துடுப்பாட்ட வீரரின் பணி மிகக் கடுமையானது. அந்த வகையில் இவர் இந்த இடத்தை சிறப்பாகவே நிரப்புகின்றார். அணியின் சுழல் பந்து வீச்சாளராகவும் இருக்கும் இவர் சிறந்ததொரு பந்துக் காப்பாளரும் ஆவார். தன் வயதுப் பிரிவில் இதுவரை 3 இலக்குகளைச் சரித்திருக்கும் இவர், 19 வயதிற்குப்பட்ட பிரிவில் 18 இலக்குகளைச் சரித்தவர். சிறிய வயதில் நிறைந்த அனுபவத்தைப் பெற்றுள்ள இவர் புறவாழ்க்கையில் மிகுந்த கூச்ச சுபாவத்தோடு காணப்படுகின்றார். பணிவான இவர் தன்னைப் பற்றிக் கூற வெகுவாகக் கூச்சப்படுகின்றார். ஆனால், மிக வேகமாக பந்தை அடித்து ஆடும் ஆற்றல் பெற்றவர். பொதுவாக தான் சந்தித்த பந்து வீச்சாளர்களை இலகுவாகக் கையாண்டதாகக் கூறும் இவர், தன்னைச் சிறிது சங்கடப்படுத்திய பந்து வீச்சாளர் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த கரிதரன் என்கிறார். தனது துடுப்பாட்ட திறமைக்குத் தன் பயிற்றுநருக்கு நன்றி கூறும் சசிகரன், இன்னும் சிறப்பாக துடுப்பாட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார். "இவரது பணிவும், பயிற்சியின் ஆர்வமும், செயற்படும் மனப் பாங்கும் இவரது வெற்றிக்குக் காரணம்" என்கிறார் இவரின் பயிற்றுநர்.

> 17 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றில், 172 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். தன்வயதுப் பிரிவில் 172 ஓட்டங்களையும், 10 ஆறுகளையும் 22 நான்குகளையும் கொண்டமைந்திருக்கும் இவரது சாதனைப்பட்டியல் சிறிது நீளமானது.

### ப. சிவனேசன்

17 வயதிற்குட்பட்ட பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி வீரர் ப. சிவனேசன் 103 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருக்கின்றார். 01-11-1978 இல் பிறந்த இவர் தனது சதத்தைத் தனது கல்லூரி மைதானத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிரான ஆட்டத்தில் பெற்றிருக்கின்றார். இதில் 14 நான்குகளும் அடங்கும். மூத்தோரைக் கண்டதும் மிக அடக்கத்துடன் உரையாடும் இவர் புதியவர்களைக் கண்டதும் உரையாட வெட்கப்படுகின்றார். தற்போதைய அணியின் விக்கெட் காப்பாளர் இவர் என்பதும், 1993 15 வயதுக்குட்பட்ட அணியின் தலைவர் இவரென்பதும் பயிற்றுநர் மூலமே அறிந்து கொள்ள முடிந்தது. 15 வயதிற்குட்பட்ட அணியில் இரண்டு வருடங்கள் அங்கம் வகித்த இவர், இவ்வருடம் முதன்முறையாக 17 வயதிற்குட்பட்ட பிரிவில் ஆடுகின்றார். வலது கைத் துடுப்பாட்ட வீரராகிய இவர், அணியின் 3 -ம் இலக்க துடுப்பாட்ட வீரர் ஆவார். இந்த வரிசை ஏறத்தாழ ஆரம்பத் துடுப்பாட்ட வீரரின் கடமையைத் தன்னகத்தே கொண்ட கடினமானதொரு நிலையைக் காட்டுவதாகும். இந்நிலையில் பெறப்படும் சதங்கள் மிகுந்த கவனத்துக்குரியவை. இம்முறை தமது பாடசாலை மட்டத்தில் ஓட்ட எண்ணிக்கைச் சராசரியில்



> 17 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், 103 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருக்கும் இவர், இவ் வயதுப் பிரிவில் தனது கன்னி அறிமுகத்திலேயே சதம் போட்டிருப்பது பாராட்டிற்குரியது.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

### கே. சஞ்சயன்



15 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இதுவரையில் பெறப்பட்டுள்ள ஒரேயொரு சதம் பரியோவான் கல்லூரி வீரர் கே. சஞ்சயனால் பெறப்பட்டதாகும். இவர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 113 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். மிகுந்த கூச்சத்துடன் புன்சிரிப்பு மாறாமல் உரையாடும் இவர், 06. 04. 1979 ல் பிறந்தவர். இவ்வருடம் 15 வயதுக்குப்பட்ட அணியில் இவர் ஆடுவது இரண்டாவது ஆண்டாகும். வலது கைத் துடுப்பாட்ட வீரராகிய இவர், அணியில் அறிமுகமாகியது ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகவாகும். இம்முறை இவர் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிராக 66 ஓட்டங்கள் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவரது பயிற்றுநரின் ஆலோசனையின் படி, ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையில் இருந்து தன்னை 7 ம் இலக்க மத்திய வரிசை ஆட்டக்காரராக மாற்றிக் கொண்டார். அதன் பின்பே 113 மற்றும் 66 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்ததென்றும் இவர் நன்றியுடன் பயிற்றுநரை நோக்குகின்றார். தான் இதுவரை சந்தித்த எந்தப் பந்துவீச்சாளரும் தனக்குச் சவாலாக இருக்கவில்லையென்று கூறுகின்றார். இவர் மிட் ஒன், மிட்ஒவ் திசைகளில் வேகமாக பந்தைச் செலுத்தும் ஆற்றல் பெற்றவர். சுமாராக பந்து பிடிக்கும் ஆற்றலை தற்போது வேகமாக வளர்த்துவரும் இவர் பற்றி பயிற்றுநர் கூறும் போது, "இவர் வேகமாக அடித்தாடும் வீரர்தான், ஆனால் நம்பகமான துடுப்பாட்ட வீரர். அதோடு பந்து வீச்சாளர்களை இலகுவாகக் கையாள்வதன் மூலம் அவர்களைச் சலிப்புறச் செய்துவிடுவார்". என்கிறார். மழலை முகம் மாறாத இவர் புலன் ஒன்றிணைப்பு அவதானம், அதற்கேற்ற மனப்பக்குவத்தை ஏற்படுத்தல் என்பவற்றின் மூலம், மிகக் கடுமையான சதம் ஒன்றினைப் பெற்றிருக்கின்றார்.

இவர் எவ்வாறு கல்வியில் ஆர்வம் செலுத்திவருகிறாரோ, அதே போல் பயிற்சியிலும் தீவிரமாக ஈடுபடுவார் என்கிறார்கள் இவரின் நண்பர்கள். புன்சிரிப்பு மாறாமல் அமைதியாக நிற்கிறார் சஞ்சயன்.

> 15 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ,ஆட்டமிழக்காமல் 113 ஓட்டங்களைப் பெற்றிருக்கும் இவராலேயே, இவ் வயதுப் பிரிவில் இதுவரையில் பெறப்பட்ட ஒரேயொரு சதம் போடப்பட்டது.



### வி.எஸ். நிர்மலானந்தன்

இவ்வருட 17 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது சதத்தைப் பெற்ற வீரர் என்ற பெயரைத் தட்டிச் செல்கின்றார், பரி. யோவான் கல்லூரியைச் சேர்ந்த வி. எஸ். நிர்மலானந்தன். இவர் யூனியன் கல்லூரிக்கு எதிராக 100 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருக்கின்றார். மேலும் மகாஜனாக் கல்லூரிக்கு எதிராக 63 ஓட்டங்களையும் பெற்றிருக்கின்றார். இவ்வருடம் கல்லூரியின் 17 வயதிற்குட்பட்ட அணிக்குத் தலைவராக இருக்கும் இவர் 16. 01. 1977 ல் பிறந்தவர். அணியின் விக்கெட் காப்பாளரும் இவரே. 15 வயதிற்குட்பட்ட பிரிவு முதலே தொடர்ந்து ஆடிவரும் இவர், 17 வயதிற்குட்பட்ட பிரிவில் மூன்றாவது வருடமாக ஆடிக்கொண்டிருக்கிறார். இவ் வருட 19 வயதுக்குட்பட்ட அணியிலும் கல்லூரிக்காக ஆடியவர். வலது கைத்துடுப்பாட்ட வீரராகிய இவர் அணியின் 3ம் இலக்க துடுப்பாட்ட வீரராவார். தொடக்க ஆட்டக்காரர் நலிவுறும் போது அந்த இடத்தை நிரவி ஆட்டத்தை வளர்த்தெடுத்துச் செல்லும் பணி இலக்கம்



> 17 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலாவது சதத்தைப் பெற்ற வீரர் என்ற பெயரைத் தட்டிக்கொண்ட இவர், ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றார்.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவசரகால...

...தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நடைமுறையிலுள்ள வடக்கு -கிழக்கு மாகாணம், ஒன்றிணைக்கப்பட்ட தொகுதி என்பதற்கு விரோதமான முறையில் வடக்கு, கிழக்கு என, தமிழர் தாயகத்தை பிரித்துப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கான குடியொப்பத்தை நடத்துவதற்கு முன்னைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பலமுறை கசெட் பிரகடனம் செய்தும், அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் கைவிட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் தற்பொழுது சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்காவின் கையொப்பத்துடனான அவசர காலப் பிரகடனம், சிறீலங்காவின் அரசியலமைப்புக்கு முரணான வகையில் வடக்கு, கிழக்கு என தன்னிச்சையான முறையில் தமிழர் தாயகத்தைப் பிரித்து வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# தமிழ் மக்கள் உயிர்...

விடுதலைப்புலிகளின் கரும்புலி அணி மகளிர் பிரிவு தலைவி நளாயினி தலைமையில், இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, சுழியோடிச் சென்று வெடிகுண்டைக் கப்பலுடன் இணைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், குண்டு வெடிப்பை அடுத்து கப்பலைச் சுற்றி வளைத்த கடற்புலிகளின் படகுகள் தாக்குதலை தொடர்ந்து நடாத்தி ஆயுதங்களைக் கைப்பற்றிக்கொண்டதாக வேறு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயினும், இப்பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை, இத்தாக்குதல் தொடர்பான விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வச் செய்திகள் கிடைக்கப்பெறவில்லை.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட சர்வதேசச் செய்திமுகவர்கள், சிறீலங்கா அரசு ஏற்கனவே தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருந்ததாகவும், இத்தாக்குதலுக்குப் பத்துத் தினங்களுக்கு முன்னர் கூட விடுதலைப்புலிகள் மீது சிறீலங்கா கடற்படை கடும் தாக்குதல்களை நடாத்தியமை உண்டு எனவும், ஆகவே இது யுத்த நிறுத்தம் ஒன்றின் தேவையை வலியுறுத்துகிறது எனவும் கூறியுள்ளனர்.

இத்தாக்குதல் சமாதான முயற்சியை வேகப்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்தும் நடவடிக்கை. என, சிறீலங்காவின் தகவல் துறை அமைச்சர் தர்ம சிறி சேனநாயக்கா கூறியுள்ளதாக, ஏ. எவ். பி நிறுவன செய்திகள் கருத்து வெளியிட்டுள்ளன. ■

# அராலிக்...

...யின் பின்னர், அவர்கள் விமானத்தில் ஏற்றி கொழும்பிற்கு அனுப்பப்பட்டனர். அவ்வேளையில் கொப்பேகடுவவை இரத்மலானையிலிருந்து ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல, உலங்குவானூர்தியைத் தயாராக வைத்திருக்கும்படி, இரத்மலானை விமானப்படைக்கு பலாலியிலிருந்து செய்தி பறந்தது. ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிலையமும் உசார்ப்படுத்தப்பட்டது. சிகிச்சை பலனளியாத நிலையில் கொப்பேகடுவ அங்கு உயிரிழந்தார்.

அன்று மாலை சிறீலங்கா வானொலி, அராலியில் நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலில், லெப். ஜெனரல் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரட்னா உட்பட ஒன்பது படை அதிகாரிகள் பலியானதாக அறிவித்தது.

அராலியின் பிரதான வீதிக்கு அருகே புதைத்து வைக்கப்பட்டு, சிறீலங்காவின் உயர்படை அதிகாரிகளைக் கூண்டோடு அழித்த அந்தக் கண்ணிவெடி, தீவகப்பகுதி அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்ற அறிவிப்பு பொய்யானது என்பதை உலகிற்கு அறிவித்ததோடு, சிறீலங்கா இராணுவத்திற்கு மீளமுடியாத பெரும் பின்னடைவையும் கொடுத்தது.

இதேவேளை, எதிரி படையெடுப்பை ஆரம்பிக்க நிமிடங்களை எண்ணிக்கொண்டிருக்கையில், நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு ஒருநாள் முன்பாக இத்தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியமை, விடுதலைப் புலிகள் இயக்கம் உலகில் தற்போதுள்ள கெரில்லா அமைப்புக்களிடையே செயல் வல்லமை பொருந்தியதாக உள்ளது என்ற சர்வதேச இராணுவ ஆய்வாளர்களின் கூற்றை மீண்டும் ஒருமுறை நிரூபித்தது.

இந்தவகையில், இக்கண்ணிவெடித் தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொள்ளக் காரணமான விடுதலைப் புலிகளுக்குத் தலைவர் பிரபாகரன் பாராட்டி விசேட பரிசில்களை வழங்கிக் கௌரவித்தமை பொருத்தமானதே.

தீவகப் பகுதிக்குள் ஊடுருவி, நிலக்கண்ணியை வைத்த விசேட இராணுவ வேவுப்பிரிவைச் சேர்ந்த நான்கு போராளிகளுக்கும், அவர்களுக்கு பாதுகாப்புக் குழுவாக சென்ற மேலும் ஐவருக்கும் இந்நுட்பம் வாய்ந்த கண்ணிவெடியைத் தயாரித்த போராளிக்கும் புதைக்கும் இடத்தை நுட்பமாகத் தெரிவுசெய்த போராளிக்கும் என 11 போராளிகள் சம்பவம் நடைபெற்ற ஒரு மாதத்தின் பின்னர், தலைவர் பிரபாகரனிடமிருந்து செயல் திறமைக்காக பரிசில்கள் பெற்றபோது, பிடிக்கப்பட்ட படங்கள் தென்னிலங்கைப் பத்திரிகைகளிலும் மீள்பிரசுரமாகின. அப்போது அராலிக் கண்ணிவெடியின் தாக்கம் எத்தகையது என்பதை அங்குள்ளவர்களும் புரிந்துகொண்டனர். ■

# நிமிர்வு...

ஓர் குண்டு!... மீண்டும் மறுகுண்டு... தொடர் இடிமுழக்கம்போல் அங்கு அதிர்வோசைகள் எழுந்து அடங்கின!!!

சோமனின் வரவை மோப்பம் பிடித்து, அவனைப் பிடித்து, அடித்து, முறித்து... வெட்டிச்சுட்டு, வேதனைப்படுத்தி, குதறிக்கொல்ல வந்த கொலைவெறியர் சிலர் அங்கு உடல் சிதறிக்கிடந்தனர்.

வேட்டை ஒன்றை வெகுவிரைவில் முடித்து, வெளிப்பட்டுவந்த பெண்புலிபோன்ற சுந்தரி, கொதியடங்கிய கூர்மையான பார்வையை அங்கு படரவிட்டபோது, முற்றத்தை முற்றுகையிட்டு நின்ற மூர்க்கர்களை அவளால் காணமுடியவில்லை.

வெண்மணல் பூத்த முற்றம் செந்நிறமாகிச் சிவந்துகிடந்த, சிதறிக்கிடந்த தசைக்குவியலுக்கிடையே, முதலாளி முத்துலிங்கத்தின் முகம் மட்டும் முழுமையாகத் தெரிந்தது.

காட்டிக்கொடுக்கும் அந்தக் கயவனின் கரிய முகத்தின் மேல் காறி உமிழ்ந்தாள் அவள். ■

# நீங்காத நினைவலைகள்...

நாம், காப்பு எடுப்பதற்கு எந்த மறைப்புமே இல்லாத வெளியில் நின்று சண்டையிட்டோம். எதிரி கோயிலினுள் மறைந்து நின்றவாறு எம்மைத் தாக்கத் தொடங்கினான். இதனால், எம்மில் பலத்த இழப்பு ஏற்பட்டது. ஒரு மறைப்புமே இல்லாததால் எமது பக்க இழப்பு அதிகரித்துக் கொண்டே வந்தது. ஆனாலும், நாம் எமது தாக்குதலை மேலும் தீவிரமாக்கினோம். அதன்பின்னர் எதிரி தரப்புத் தாக்குதல் குறையத் தொடங்கியது.

எமக்குரிய காப்புகளை அமைப்பதற்கு எம்மிடம் மண்வெட்டியோ, சவளோ இல்லை. ஆனால், எமக்கு காப்பகழி அவசியம் தேவைப்பட்டது. எனவே, கையில் அகப்பட்ட தடிகள், கம்புகளின் உதவியுடன் காப்பகழிகளை அமைத்தோம்.

இந்த வேலை முடிந்த பின்னர் எமது குழுவும் இன்னும் சில குழுக்களும் அங்கே மாறி மாறி முன்னுக்குப் போய் நிலைகளை எடுத்து காவலில் நின்றோம். பின் ஒரு இடத்தில் எமது குழு, சிறு சிறு பிரிவுகளாகப் பிரிந்து குறிப்பிட்ட சில இடங்களில் நின்றோம்.

எமக்கு முன்னால் பற்றை. பற்றைக்கு அப்பால் எதிரியின் எறிகணை நிலை. அதிலிருந்து எதிரி எறிகணையைத் தயார்ப்படுத்தி ஏவும் சத்தம் காதைப் பிளக்கும். அந்த இடத்தில் இரவு நேர மோதல் ஒன்றும் நடந்தது.

ஒரு நாவல் மரத்தின் மறைவில் பற்றைக்கு நடுவே இருவரை நிறுத்திவிட்டு, ஏனையோர் பின்னுக்கு வந்து, சாப்பிடுவதற்காக (உயிர் போகின்ற பசி) பொதியை அவிழ்த்துக்கொண்டிருந்தபோது ஒரு போராளி வந்து,

"ஆமி மூவ் பண்ணிவாறான். ரெடியாகுங்கோ"

என்று சொன்னார். அவிழ்த்த சாப்பாட்டை அப்படியே வைத்துவிட்டு (இந்த ஆமிக்காரன் நாசமாகப் போக) நாவல் மரத்தடியில் நின்றவர்களையும் அழைத்துக்கொண்டு தயாராகினோம்.

வந்து சேர்ந்து எமக்குரிய நிலைகளை அடைந்தபோது மதியமாகிவிட்டது. மாலைக்கிடையில் எமக்குரிய காப்பகழிகளை வெட்டி முடிக்குமாறு உத்தரவு கிடைத்தது. உடனே எல்லோரும் கையில் அகப்பட்ட பொருட்களால் காப்பகழிகளை அமைக்கத் தொடங்கினோம். அந்த இடத்தில் நீர் என்ற பொருளையே காணமுடியாது. நாம் நின்ற இடத்துக்குச் சற்றுத் தள்ளி ஒரு கோயில். அதற்குச் சற்றுச் சற்றுத் தள்ளி ஒரு குளம். ஆனால், தண்ணீர் இல்லை. நாம் அந்தக் குளத்தை ஆழப்படுத்தி நீரை ஊறவிட்டோம். ஊறிய நீரை எடுத்துப் பார்த்தால் ஒரே புழுக்கள். துப்பாக்கிகளைத் துப்பரவு செய்யவென வைத்திருந்த துணியால் நீரை வடித்துக் குடித்தோம். (எமது வயிற்றெரிச்சலை இயற்கைக்கும் பொறுக்க முடியவில்லைபோலும்). சிறிது நேரத்திலே மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது.

எமது நிலைகளிலெல்லாம் தண்ணீர்.... தண்ணீர்.... ஒரே தண்ணீர் மயம். ஒவ்வொரு போராளியைப் பார்க்கும்போது நனைந்த கோழியின் ஞாபகம் தான் வந்தது. எல்லோருமே குளிரில் நடுங்கினாலும், எல்லோரது கண்களுமே எதிரியின் அசைவுகளை உன்னிப்பாக நோக்கியபடி. உடல்தான் நனைந்ததே தவிர விடுதலை உணர்வு நனையவேயில்லை. துப்பாக்கிகளைப் பிடித்திருந்த கைகள் தளரவில்லை. சேற்றுக்குள் நிற்பதும் ஒரு இன்பமாகத் தான் இருந்தது.

கொம்படி வெட்டையில் நாம் வெளியில் நின்றவாறு எதிரியைத் தாக்கிக் கொண்டிருந்தோம். எதிரியின் எறிகணை ஒன்று எமது நிலையுள் விழுந்து வெடித்தது. எனக்கு அருகில் நின்ற வேல்விழியின் உடல் மட்டுமே தெரிந்தது. தலையைக் காணவில்லை. எனக்கு அருகிலே நின்ற போராளிக்கு வந்த சாவு.... என்னை உலுக்கியது. எதிரியை எம்மண்ணுள் விடவே கூடாது என்ற வேகம் இன்னும் கூடியது. எம் மண்ணுக்குள் எதிரியை விடாது தாக்கினோம்.

புல்லா வெளியில் எமது குழுக்கள் இறங்கித் தாக்குவதாகத் திட்டம் தயாரிக்கப்பட்டது. திட்டமிட்டபடி அதிகாலையில் தாக்குதலை ஆரம்பித்தோம். இத்தாக்குதலில் எம்மவர் தரப்பில் பலத்த இழப்பு ஏற்பட்டது. தொடர்ந்து சண்டை நடைபெற்றது. லலிதா மிகவும் வேகமாக முன்னுக்குப் போய்விட்டாள். எங்கோ மறைந்து நின்ற இராணுவத்தினன் ஒருவனின் துப்பாக்கியிலிருந்து வந்த ரவை லலிதாவைக் காயப்படுத்தியது. லலிதா விழுந்ததை அவதானித்து விட்டு அவளைத் தூக்கப் போன இன்னொரு போராளியையும் எதிரியின் ரவை தாக்கியது. இதைக் கண்ட லலிதா காயப்பட்ட நிலையிலும்,

"என்னைத் தூக்கவேண்டாம். நீங்கள் அவனை உள்ளுக்கு வர விடாமல் அடியுங்கோ" என்று சொல்லியவாறே தனது துப்பாக்கியையும் வோக்கியையும் பின்னுக்கு எம்மை நோக்கி எறிந்துவிட்டு, குப்பியைக் கடித்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

**ஜெயஜோதி**

அகிலன் வெட்டையில் கப்டன் திலகாவின் வழி நடத்தலின் கீழ் நாம் நிலைகளை எடுத்திருந்தோம். எதிரியின் வரவுக்காகக் காத்திருந்தோம். எதிரியின் வாகனத்தை வீதியில் மறித்துத் தாக்குவதற்குத் தயாராகினோம். இதில் யோகாவின் அணி முன்னுக்கு நின்றது. எதிரியின் மூன்று பவள் வாகனங்கள் எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தன. முன்னே நின்ற யோகாவின் அணியிலிருந்து அனைவரும் அந்தச் சண்டையில் காயமடைய, பலர் வீரச்சாவடைய, நாம் தாக்கிக் கொண்டேயிருந்தோம். கடைசி ஒருவர், ஒருவர் இருக்குமட்டும் விடுவதில்லை என்ற வேகத்துடன் தாக்கினோம்.

எதிரியின் மூன்று வாகனங்களும் ஏறத்தாழ நூற்றைம்பது யார் இடைவெளியில் வந்து விட்டன. இந்த நேரத்தில் எதிரியை உள்ளே வராத வண்ணம் தடுத்துக் தாக்கினோம். எமது பக்க இழப்புகள் கூடுதலாக இருந்தன. அதனால், நாம் எமது நிலைகளை மாற்ற வேண்டி வந்தது. எதிரியின் முப்படைகளும் ஒரே சமயத்தில் எம்மைத் தாக்கிக்கொண்டிருந்தன.

இதனால், நாம் நிலைகளை மாற்றிவிட்டு வேறு சில அணிகளைத் தயார் செய்து. மீண்டும் முன்னே போய் எதிரியை அடிக்கப் புறப்பட்டோம். தொடர்ந்து நடந்த சண்டையில் காயமடைந்த சுனேத்திரா, தனது துப்பாக்கியைப் பாகம் பாகமாகச் சுழற்றி எம்மை நோக்கி எறிந்துவிட்டுக் குப்பியை கடித்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள். கப்டன் திலகாவும் காயமடைந்த பின் வீரச்சாவடைந்தார்.

எதிரியை எம் மண்ணை விட்டே விரட்ட வேண்டும் என்ற ஆவேசத்துடனும், எம் உயிர் போனாலும், எமது ஆயுதம் எதிரி கையில் சிக்கக்கூடாது என்ற உயரிய நோக்குடனும் தமது இறுதி மணித்துளிவரை போராளிகள் போராடினார்கள்.

ஒன்றாகப் பயிற்சி எடுத்த, ஒரே தட்டில் எம்மோடு உணவு உண்ட, தம் தாயின் பாசத்தையும் தந்தையின் பரிவையும் சகோதரர்களின் நேசத்தையும் பற்றி எம்மோடு வாய் ஓயாது கதைத்த, எம் தலைவரின் ஈடியிணையில்லாத அன்பை அடிக்கடி சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்ட பல போராளிகள் எம்மை விட்டுப் பிரிந்தார்கள்.

சாதாரண மக்கள் எவராலுமே செய்யமுடியாத, நம்ப முடியாத பல வீரச் செயல்கள் அங்கே செய்யப்பட்டன. நான் நின்ற இடங்களில் நடந்ததை மட்டுமே எழுதியுள்ளேன். ஆனையிறவின் ஒவ்வொரு சதுர அடி நிலத்திலும் அன்று நின்று சண்டை பிடித்த ஒவ்வொரு போராளியின் அனுபவமும் ஒவ்வொரு விதமானது. அவை ஒவ்வொன்றும் விவரணத்துக்கு அப்பாற்பட்டவை.

எம்மில் பலரை முழுதாக இழந்து, பலரின் உடலுறுப்புகளை இழந்து ஆனையிறவிலே நாம் செய்த சமர் எமக்குப் பல போர் முறைகளை, புதிய நுட்பங்களைக் கற்றுத் தந்தது. தலைவர் பிரபாகரனையும் புலிகளையும் பற்றி உலகை வியப்புடன் பேச வைத்தது.

ஆனையிறவிலே நாம் கற்ற அந்தப் பாடம் தான் பூநகரியில் எம்மை புயலாக வீசச் செய்தது. ■

# நல்லின விதைகளுக்கான உற்பத்தி விழா நடைபெற்றது

முல்லை மாவட்டம் கற்சிலைமடு சிறுதானியப் பண்ணையில் அண்மையில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நல்லின விதை உற்பத்தி விழா நடாத்தப்பட்டது.

நிறுவன உதவி இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், விவசாய போதனாசிரியர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், மற்றும் உற்பத்திக் குழு பிரதிநிதிகள் ஆகியோருடன் பெருமளவு விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் பயிர்ச் செய்கையில் உச்சவிளைவைப் பெற வேண்டுமாயின், தூயவிதைகளை பயன்படுத்துவது அவசியமானது. எனவே எமக்குத் தேவையான தூயவிதைகளை நாமே உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. இதற்காக இத்தகைய திட்டங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிமுகப்படுத்தி வருகின்றது. இவ்வாறான திட்டத்தின் அடிப்படையிலேயே கற்சிலை மடுவிலுள்ள இப்பண்ணையில் எட்டு இன நிலக்கடலை வர்க்கங்களும், மற்றும் பயறு, கௌபி என்பனவும் தூய விதைக்காகப் பயிரிடப்பட்டுள்ளன.

இப்பயிர்ச் செய்கையைப் பார்வையிட்டு விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்ய ஊக்கப்படுத்தும் நோக்கிலும், இவ்விதைகளை எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கிலுமே இவ் விழா ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக்கிளை நடாத்தும்

# மாவீரர் நாள் போட்டிகள் - 1994

தமிழீழ மாவீரர்நாளை முன்னிட்டு கவிதை, சிறுகதை, ஓவியம், பேச்சு ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன.

### கவிதை - சிறுகதைப் போட்டி

* கவிதை, சிறுகதைப் போட்டிகளில் எந்த வயதினரைச் சார்ந்தவர்களும் பங்குபற்றலாம். (பால், வயதுப் பிரிவுகள் இல்லை)
* ஆக்கங்களின் கருப்பொருள் எமது தேசம் பற்றியதாயும், எமது தேச விடுதலைப் போராட்டம் பற்றியதாயும், புலம்பெயர் வாழ்வின் அவலங்கள் பற்றியதாயும் அமைதல் நன்று.
* கவிதை சாதாரண தாளில் (A4) 2 பக்கங்களுக்கு அதிகப்படாமலும், சிறுகதை (கையெழுத்துப் பிரதி) 8 பக்கங்களுக்கு அதிகப்படாமலும் அமைதல் வேண்டும்.

### பேச்சு - ஓவியப் போடடி

* ஓவியப் போட்டியும் பேச்சுப் போட்டியும் இரு வயதுப் பிரிவுகளாக சிறுவர், சிறுமியர்க்கென நடைபெறும். 16 வயதுக்கு கீழ்ப்பட்ட வயதினர்க்கும், 12 வயதுக்கு கீழ்ப்பட்ட வயதினர்க்குமாக போட்டிகள் நடைபெறும்.
* போட்டிக்கான கருப்பொருள் எமது தேசம் பற்றியதாயும், எமது தேச விடுதலைப் போராட்டம் பற்றியதாயும், புலம்பெயர் வாழ்வின் அவலங்கள் பற்றியதாயும் அமைதல் நன்று.
* ஓவியப் போட்டியில் பங்குபற்றுவோர் எத்தனை ஓவியங்களும் அனுப்பிவைக்கலாம்.
* பேச்சுப் போட்டியில் கலந்துகொள்வோர் தமது பேச்சை 5 நிமிடத்திலிருந்து 10 நிமிடம்வரை இருக்கக்கூடியதாக அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

### குறிப்பு

1) போட்டிக்கான விண்ணப்பங்களும் ஆக்கங்களும் **15-10-1994** இற்கு முன்பாக அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.
2) பேச்சுப் போட்டிக்கான விண்ணப்பதாரிகளுக்கு போட்டிக்கான திகதி தனித்தனியாக அறிவிக்கப்படும்.
3) விண்ணப்பங்கள் *C. C. T. France, 341, rue des Pyreness, 75020 Paris* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (விண்ணப்பக் கட்டணமாக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.)
4) தெரிவுசெய்யப்படும் சிறுகதை, கவிதை, ஓவியம் என்பன எமது வெளியீடுகளில் வெளியிடப்படும். பேச்சுப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெறுவோரின் உரை, மாவீரர்நாள் நிகழ்வின்போது இடம்பெறும்.
5) வயதுப் பிரிவு 1994 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதியை வைத்தே கணிக்கப்படும்.

## இலண்டனில்

# மாவீரர் நாள்

# 27-11-94

எமது மண்ணின் விடுதலைக்காய் தம் உயிரை ஈகம் செய்து, எம் மண்ணிலேயே வித்தான மறவர்களை நினைவுகூரும் மாவீரர் நாளை, இலண்டன் வாழ் தமிழீழ மக்கள் 27-11-94 இல் உணர்வு பூர்வமாகக் கொண்டாட உள்ளனர்.

இம் மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர் புகழ் பாடும் கவிதைகள், விடுதலைப் பாடல்கள், நடனம், நாடகம், வாத்திய இசை போன்ற பல்வேறான கலை ஆக்கங்கள் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் பங்கெடுத்து உங்கள் கலை ஆக்கங்களை மேடையேற்ற விரும்புவோர் 10-10-94 ற்கு இடையில்

**✆ 081-503 4294**
**081- 470 8593**

ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளும்படி வேண்டுகிறோம். அத்துடன், மாவீரர் குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் தொடர்புகொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

# அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கடந்த 24.09.1994 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் (பிரித்தானியாக் கிளை) கலை, பண்பாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட, 'எழுச்சிக் கானங்கள்' நிகழ்ச்சியில் தமிழர் புனர்நிர்மாண நிதிக்காக மேற்கொள்ளப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில், தேர்ந்தெடுக்கப்பட்ட அதிஸ்டசாலிகளினது அதிஸ்ட இலக்கங்கள் பின்வருமாறு:-

**முதலாவது பரிசுக்கான இலக்கம்:-**
**008226.**
இதற்கான பரிசு, தென்கிழக்காசியாவின் ஏதாவதொரு நாட்டிற்கு போய்வரக்கூடிய விமானச்சீட்டு.

**இரண்டாவது பரிசுக்கான இலக்கம் :-**
**015725.**
இதற்கான பரிசு கனடா அல்லது ஐக்கிய அமெரிக்காவுக்குப் போய்வரக்கூடிய விமானச்சீட்டு.

**மூன்றாவது பரிசுக்கான இலக்கம்:-**
**009216.**
இற்கான பரிசு ஐரோப்பிய நாடு ஒன்றுக்குப் போய்வரக்கூடிய விமானச்சீட்டு.

மேற்படி இலக்கங்களுக்குரிய அதிஸ்டசாலிகளை, தொலைபேசி மூலமோ அல்லது நேரிலோ உங்களுடைய அதிஸ்டச் சீட்டுடன் உடன்தொடர்புகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**தொடர்புகளுக்கு:- 081 503 4294**
**081- 470 8593**

**விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம். (பிரித்தானியக் கிளை)**

# ஐரோப்பிய நாடுகளில் திலீபன் ஞாபகார்த்த எழுச்சி விழா

இந்திய வல்லாதிக்கத்திற்கு எதிராக அறப்போர் தொடுத்து, தமிழீழ மண்ணுக்காய் தன்னை ஈகம் செய்த, திலீபன் ஞாபகார்த்த எழுச்சிவிழா, தமிழீழ மக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய நாடுகளில், மிகவும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப் பட்டுள்ளது.

தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் விழாக்களில், தமிழரின் கலை வடிவங்களான நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, காவடி ஆட்டம் என்பனவற்றுடன், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றுள்ளது. இக்கலை வடிவங்களும், இடம் பெற்ற பேச்சுக்களும் திலீபன் அவர்களின், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான அர்ப்பணிப்புக்ளையும், தியாகத்தினையும் வெளிப்படுத்தி நின்றன. அத்துடன், இவ்வெழுச்சி விழா நிகழ்வுகள் யாவும், விழாக் காண வந்த எம்மக்களின் விடுதலை உணர்வுக்கு மேலும் உரமூட்டுவதாகவும் இருந்துள்ளன. ■



17.09.1994 சனிக்கிழமையன்று சுவிசில் நடாத்தப்பட்ட திலீபன் ஞாபகார்த்த எழுச்சிவிழாவில் இடம்பெற்ற கலை வடிவங்களில் ஒன்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 5-10-94

லெப்.கேணல் குமரப்பா
லெப்.கேணல் புலேந்திரன்
உட்பட பன்னிரு வேங்கைகளின்
ஏழாவது நினைவு நாள்.

### அன்று !

கடலினில் கடல்புறா
பயணங்கள் போனது
சிறீலங்கா இராணுவம்
குறிவைக்கலானது...

### இன்று !

எங்களின் கடலிலே
எவன் எம்மைப் பிடிப்பது
எங்களின் படகினை
எவன் இங்கு தடுப்பது...




## 16-08-94

காங்கேசன்துறை
துறைமுகத்தை உள்ளடக்கிய
கடல் பரப்பில்,சிறீலங்கா
கடற்படையினது
கட்டளையிடும் தாய்க்
கப்பலையும் அதற்குத்
துணைநின்ற 'டோறா' பீரங்கிப்
படகையும், கப்டன்
அங்கயற்கண்ணி கரும்புலித்
தாக்குதல் மூலம் தகர்த்து
அழித்த நாள்.

அன்று, எங்கள் வேங்கைகளை
இடைமறித்த சிறீலங்காக்
கடற்படையின் கப்பல்களும்
படகுகளும் தாக்கப்பட்டு
அழிக்கப்படுவது, தமிழீழக்
கடற்பரப்பின் இன்றைய
வரலாறு.

விடுதலைப்புலிகளின்
கடல்வழிப் போராட்ட
வளர்ச்சியின் முக்கிய
பதிவுகளில் ஒன்றே, கப்டன்
அங்கயற்கண்ணியின்
கரும்புலித் தாக்குதலாகும்.




U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்